பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 03, சனிக்கிழமை 19.08.2017 கதிர் 286

## 2 கிலோ தங்கத்தைக் கடத்த முயன்ற புலனாய்வு அலுவலர்

சுமார் 91 லட்சம் ரூபா பெறுமதியான 2 கிலோ கிராம் தங்க ஆபரணங்களை, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்துவெளியேகொண்டுவரமுயன்ற, அரசபுலனாய்வுச்சேவைஉத்தியோகத்தர் ஒருவர்,சுங்கப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரிலிருந்து கொழும்புக்கு பயணியொருவர் கொண்டுவந்த தங்க ஆபரணங்களையே, வெளியே எடுத்துவருவதற்கு அந்தப் புலனாய்வு உத்தியோகத்தர் முயன்றுள்ளார் பக்கம் 18

# ரணிலை மாற்ற சு.க. முயலாது!

## அக்கட்சியின் செயலாளர் துமிந்த திஸநாயக்க உறுதி

**கண்டி, ஓகஸ்ட் 19**

**நாட்டின் தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பதவி நீக்கிவிட்டு புதிய பிரதமரை நியமிக்கும் நோக்கமோ, தேவையோ சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்படவில்லையென அக்கட்சியின் பொதுச் செயலாளரும் விவசாய அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கண்டிக்கு விஜயம்மேற்கொண்டிருந்த அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், முக்கிய நோக்கங்களை அடைந்துகொள்ளும் இலக்கில் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டினார்.

"சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் தனித்து பக்கம் 18



கோப்பாய் துயிலும் இல்லத்துக்குச் சமீபமாக

## இந்தியப் படையின் நினைவிடத்தை புனரமைக்கின்றது இலங்கைப் படை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஓக.19

கோப்பாயில் கொல்லப்பட்ட இந்தியப் படையினரின் நினைவாக, அங்கு அமைக்கப்பட்ட நினைவிடத்தை கடும் பாதுகாப்புக்கு மத்தியில் இலங்கைப் படையினர் புனரமைத்துவருகின்றனர்.

இந்தியப் படை அதிகாரிகள்அந்தநினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவதற்கு வருகைதரவுள்ளனர் எனக் பக்கம் 18

## அரசுப் படைகளினாலேயே பாலச்சந்திரன் படுகொலை!

### விசனம் தெரிவிக்கிறார் சொல்ஹெய்ம்



விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன், இலங்கை அரசுப் படையினரால் பிடிக்கப்பட்டே படுகொலை செய்யப்பட்டார்என்று தாம்வலுவாக சந்தேகிக்கிறார் என்றும், இது ஒரு மோசமான தீய செயல் என்றும் தெரிவித்துள்ளார் பக்கம் 18

## வாக்களிப்பில் ஒன்றுபடக் கோரியோர் இன்று பதவியில் பிரிந்து நின்று சண்டை

### ஊழல் குற்றச்சாட்டுக்களால் வெட்கம் என்கிறார் வரதர்




யாழ்ப்பாணம், ஓக.19

வடக்கு மாகாண சபை கடந்த காலங்களில் ஊழல்நிறைந்த சபையாக செயற்பட்டு வெளிவந்திருப்பது வெட்கக் கேடானது எனவடக்கு,கிழக்குமாகாண சபையின்முன்னாள்முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தல் காலங்களில் ஒன்றுமையுடன் வாக்களியுங்கள் என பக்கம் 18

அளப்பு அருணாசலம்



வெல்ல மட்டும் கூட்டு; பின்னர் வேட்டு....!

## பிரபாவுடன் அதிக நேரத்தை செலவிடமுடியாதமை வருத்தமே!

### சமாதானத்தூதர் சொல்ஹெய்ம் கவலை



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் அதிக நேரத்தைச் செலவிட முடியாமல் போனமைக்காக வருந்துகிறேன் என்று இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் பக்கம் 03

## டெனீஸ்வரன் மீதான நடவடிக்கை: ரெலோவின் கூட்டம் நாளையே!

யாழ்ப்பாணம்,ஓக.19

கட்சியின் தலைமைக் குழு விடுத்த வழிகாட்டலை ஏற்க மறுத்து - தமது மாகாண அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்ய முடியாது என அடம்பிடித்துவரும் டெனீஸ்வரனுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் ரெலோவின் கூட்டம் ஒருநாள் பிற்போடப்பட்டுள்ளது.

இது தொடர்பான ரெலோ தலைமைக் குழுவின் கூட்டம் இன்று காலை வவுனியாவில் நடைபெறுவதாக இருந்தது. பக்கம் 18

## சட்டத்துக்கு முரணாகக் கட்சியிலிருந்து நீக்கினால் டெனீஸ் நீதிமன்று செல்வார்



யாழ்ப்பாணம், ஓக. 19

சட்டத்திற்குப் புறம்பாக என்னைக் கட்சியிலிருந்து நீக்கினால் நான் நீதிமன்றத்தை நாடுவேன் என வடமாகாண போக்குவரத்துத்துறை அமைச்சர் ப. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கட்சியிலிருந்து உங்களை நீக்கினால்நீங்கள் என்ன செய்வீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்குப் பக்கம் 18

## நாமலை நீதிமன்ற விசாரணைக்கு அழைக்கும் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஓக.19

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக பொலிஸ் அதிகாரத்தை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் சந்தன களங் சூரிய நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் அதிகாரியொருவரை அச்சுறுத்தினார் பக்கம் 18

47 ஆண்டுகளின் பின்னர்

## கடற்படையின் தளபதியாக தமிழர் ட்ரவிஸ் சின்னையா!



கொழும்பு, ஓக.19

இலங்கையின் புதிய கடற்படைத் தளபதியாக றியர் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில், நடந்த நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து,

றியர் அட்மிரல் ட்ராவிஸ்சின்னையாநியமனக் பக்கம் 18

## யாழ். நகரக் கடைகள் அகற்றல்: மேன்முறையீட்டு நீதிமன்றின் முன்

கொழும்பு, ஓக.19

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்குப்பக்கத்தில் மின்சார நிலைய வீதியில் உள்ளஒன்பதுகடைகளை அகற்றும்படி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மற்றும் மாகாண மேல்நீதிமன்றம் ஆகியன விடுத்த உத்தர வுகளுக்கு எதிராகக் கொழும்பு மேன்முறையீட்டுநீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட மேன் பக்கம் 18

நல்லாட்சி அரசின் 2 வருடப் பூர்த்தி:

## கூட்டு எதிரணியினர் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக.19

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து நேற்றுடன் இரண்டு வருடங்களை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு கூட்டு எதிரணி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று மாலை கொழும்பு வைத்தியசாலை லிப்டன் சுற்றுவட்டத்தில் இடம்பெற்றது. பக்கம் 18

# தற்போதைய கிழக்கு முதலமைச்சர் மீண்டும் அதே பதவிக்கு வரமாட்டார்!

## பிரதி அமைச்சர்அமீர் அலியின் நம்பிக்கை

கொழும்பு, ஓக. 19

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அடுத்த தடவை கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக வரமாட்டார் என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

கோறளைப்பற்று மத்தி பலநோக்கு கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் செய்த அபிவிருத்திகளை பட்டியலிட்டு சொல்லப்போனால் கிழக்கு முதலமைச்சரால் எங்களை முந்த முடியாது.

அவருடைய ஏறாவூர் பகுதியிலே கடந்த காலத்தில் அரசியலுக்கு வருகின்ற பொழுது அவருடைய கட்சிக்கு எதிராக பேசி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வழக்கு பேசியவர். அரசியலிலே கருத்து வேறுபாடுகள் அரசியல் காலத்தில் மாத்திரம் தான் இருக்க வேண்டும்.

தேர்தல் வருகின்ற பொழுது கருத்து முரண்பாடுகளை பேசிக் கொள்கின்றோம். தேர்தல் இல்லாத காலத்தில் சமூகத்திற்கு நல்ல தலைமைத்துவத்தை செய்கின்ற பண்பைக் கொண்டிருக்க வேண்டியவர்கள் மன நோயாளர்களாக போய் பேசுகின்றார்கள் என்றால் என்னிடத்தில் தருவதற்கு மருந்து கிடையாது.

கிழக்கு மாகாண சபை கலைத்து விட்டால் எனக்கு தொங்க கயிறு இல்லையே என்கின்ற பயம், அச்சம் அவரை அழுத்திக்கொண்டிருக்கின்றது. நாங்கள் ஆரம்பித்து வைத்த வேலைகளை திறந்து வைத்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஏறாவூரிலே நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலான ஆரம்பித்து வைத்த நகர சபைகட்டுமானத்தை பிரதமரை அமைத்து வந்து திறக்கின்ற நிலைமை.

இப்படிக் கட்டப்பட்ட கட்டடத்தை ஆரம்பித்தவர் உயிரோடு இருக்கும் பொழுது செய்கின்ற நிலவரத்துக்கு சொந்தக்காரரான முதலமைச்சர் எங்களுக்கு கோவைகளை காட்டி பேசுவதற்கு எந்த யோக்கியதை கிடையாது.



முதலமைச்சரை பகிரங்கமாக விவாதத்திற்கு அழைக்கின்றேன். கிழக்கு முதலமைச்சர் மாகாண சபை தேர்தலில் வெல்ல வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

ஏனெனில், அவர் எனது நல்ல நண்பர். ஆனால் எதிர்காலத்தில் முதலமைச்சர் பதவி அவருக்கு கிடையவே கிடையாது என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி குறிப்பிட்டுள்ளார்.

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க கூட்டம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க மகோற்சவ கால பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இந்து இளைஞர் சங்க பணிமனை மண்டபத்தில் நடைபெறும் என தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.(இ)

## மத்தியஸ்தர் சபை அமர்வு இடமாற்றம்

கோப்பாய், ஓக.19

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவின் கீழ் இயங்கும் மத்தியஸ்தர் சபையின் அடுத்த அமர்வு இன்று புத்தூர் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையில் வாராந்தம் நடைபெற்று வந்தன. அந்தப் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற இருப்பதனால் இந்த தற்காலிக இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று மத்தியஸ்தர் சபையின் தலைவர் இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

# தேர்தல்கள் மேலும் தாமதித்தால் நீதிமன்றத்துக்குச் செல்லத் தயார்!

## பொது எதிரணி எச்சரிக்கை



மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசு மேலும் தாமதித்தால் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு கொன்றைத் தொடரப் போகிறோம் என பொது எதிரணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் நடத்திய கூட்டமொன்றிலேயே இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தலையும், உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் தமது இஷ்டத்துக்கு ஒத்திவைப்பதற்கு அரசுக்கோ தேர்தல்கள் ஆணையகத்துக்கோ எவ்வித உரிமையும் கிடையாது.

தேர்தல்களை தைரியமாக சந்திக்கும் திராணியில்லாத அரசு தனது ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக தேர்தல்களை ஒத்திவைப்பது ஜன நாயகத்துக்கு முற்றிலும் விரோதமான செயல். ஏற்கனவே மக்கள் மத்தியில் ஆட்டம் கண்டிருக்கும் இந்த அரசு அடுத்துவரும் சகல தேர்தல்களிலும் மண்கவ்வப் போவது நிச்சயம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கணேச முன்பள்ளி தமிழ்த்தின விழா

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, கணேச சனசமூக நிலைய கணேச முன்பள்ளியின் தமிழ்த்தின விழா இன்று காலை 9 மணிக்கு முன்பள்ளியின் முன்றிலில் சனசமூக நிலையத்தின் தலைவர் தா.பால சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேல் நீதிமன்ற வலயக் கணக்காளர் வெல்லவராஜன் ரதீஸ், வலிகாமம் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை கிருபானந்தன், கௌரவ விருந்தினர்களாக திருமதி கோமதி தவராசா (சுவிஸ்), திருமதி ஞானேஸ்வரி அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஓக.19

நல்லூர் உற்சவத்தை யொட்டி பருத்தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.

இன்றைய தலைப்பு: 'ஒருநிலைப்படுத்தப்பட்ட மனம்' (இ)

# தேரர் சட்டத்தைக் கையில் எடுத்த செயலை பாராட்டுவது சரியா? உலமா கட்சி கண்டனம்!

கொழும்பு, ஓக. 19

மட்டக்களப்பு விகாராதிபதியின் செயல் வரவேற்புக்குரியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கூறியிருப்பதை உலமா கட்சி வன்மையாக கண்டிக்கிறது என அதன் தலைவர் முபாறக் அப்துல்மஜீட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்றைய தினம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மீராவோடை பாடசாலை ஒன்றின் காணி சம்பந்தமான பிரச்சினைகளை பொலிஸ் மற்றும் நீதிமன்றத்தின் ஊடாக தீர்த்துக்கொள்ள முடியும் என்பதே யதார்த்தமாகும்.

இதனை விடுத்து ஆடு நனைகின்றது என அழும் ஓநாயின் செயலை நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் வரவேற்றுள்ளமை பௌத்த சமயத் தலைவர்கள் சட்டத்தை கையில் எடுத்து செயற்பட முடியும் என்ற அங்கீகாரத்தை அளித்தது போன்றதாகும்.

தமிழ் மக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழும் இக்கால சூழ்நிலையில் ஆங்காங்கு இடம் பெறும் சம்பவங்களுக்காக தமிழ் மக்கள் மீது பாசத்தை காட்டுவது போன்றும் அவர்களுக்காக களத்தில் குதிப்பது போன்றும் சில பௌத்த சமயத்தலைவர்களின் செயற்பாட்டின் சூட்சுமத்தை கிழக்கு தமிழர்கள் புரிந்து கொள்ள வில்லை என்றால் அதை என்னவென்று செல்லமுடியாதுள்ளது.

இவ்வாறான சட்டத்தை மீறிய செயற்பாடுகளை தமிழர்கள் வரவேற்றால் நாளை தமிழ் பகுதிகளுக்குள் சிலை மற்றும் அத்துமீறல் போன்றவற்றை இவர்களே கொண்டு வந்தால் எந்த முகத்துடன் இவர்களை கண்டிக்கப் போகிறார்கள்?

சட்டத்தை நாட்டின் எந்த வொரு தனிநபரும் கையில் எடுப்பதை உலமா கட்சி அனுமதிக்காது. இவ்வாறுதான் மஹிந்த காலத்திலும் சிலர் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு செயற்பட்டனர்.

அதனைக்கண்டித்து ஆட்சியை மாற்ற துணை போனவர்கள் இன்று முஸ்லிம்களையும் தமிழர்களையும் சீண்டி விடுவதற்காக சட்டத்தை கையில் எடுப்போரை பாராட்டுவது நல்ல செயலாகத் தெரியவில்லை.

இதே வண.சுமண தேரர் தமிழ் கிராம உத்தியோகத்தர் ஒருவரை தகாத வார்த்தைகளால் பேசிய போது எந்த வொரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரும் இச்செயலுக்காக அவரை பாராட்டவில்லை.

நாட்டில் சமாதானத்தையும், சகல இனங்களையும் நேசிக்கும் பல நல்ல பௌத்த தேரர்கள் இருக்கின்றனர்.

அதே போல் சிங்கள பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் சமயத்தலைவர்களும் உள்ளனர்.

ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் சுமண தேரரின் சட்டத்தை கையில் எடுத்த செயலை பாராட்டும் கருத்தை உலமா கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன் தனது கருத்தை பகிரங்கமாக அவர் வாபஸ் பெற வேண்டும் எனவும் உலமா கட்சி கேட்டுக்கொள்கிறது என அதன் தலைவர் மிகப் பகிரங்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.




யாழ்ப்பாணம், ஓக.19

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: பரமேஸ்வரி கணேசன், வயலின்: சு.கோபிதாஸ், மிருதங்கம்:நா.மாதவன், கெஞ்சிரா: நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங்: சி.செந்தூரன்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சிவநெறிப்பிரியன் சைவநெறிச் சன்மார்க்கர் மு.நித்தியானந்தா 'முருகப்பெருமானும் அருணகிரி நாதரும்' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (ச)

# பாப்பாண்டவரின் பண்புகளுடன் எனது பேச்சை ஒப்பீடு செய்வதா?

## முதல்வருக்காக மன்னிப்புக் கோருகிறார் எதிர்க்கட்சித் தலைவர்



மாகாண சபையின் கையாலாகாத் தன்மைக்கு விடையளிக்கத் தெரியாமல் முதலமைச்சர் பாப்பாண்டவரின் பெயரை உவமைக்கு எடுத்துக் கொண்டமை கண்டிக்கத்தக்கது.

– இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

"கடந்த வியாழக்கிழமை வட மாகாண சபையின் அமர்வின் போது, என்னால் முன்னர் ஜூலை 21 ஆம் திகதியன்று வட மாகாண சபையின் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு விவாதத்தை ஆரம்பித்து வைத்துச் சுட்டிக்காட்டப்பட்ட வினைத்திறனற்ற செயற்பாடுகள் தொடர்பான விடயங்களுக்குத் தர்க்க ரீதியான பதிலளிக்காமல், பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்காக நான் அவ்வாறு கூறுகிறேன் எனக் குறிப்பிட்டமையுடன் அதற்கு உவமையாக 'பாப்பாண்டவரின் பகர்வுகள் போல் பலதையும் பத்திரிகைகள் ஊடாகப் பகிர்ந்து கொள்கின்றேன்' என்று கூறியமையோடு, அவ்வாறு செய்வது 'நல்லதல்ல' என்றும் முதல்வர் கூறியுள்ளார்.

என்னை ஊடக விளம்பரத்திற்காகச் செயற்படுகிறார் என விடயத்தைத் திரிபுபடுத்த முயன்ற முதல்வர், எனது செயற்பாடுகளை கத்தோலிக்க மக்களின் தலைவராகிய பாப்பாண்டவருடன் ஒப்பிட்டுப் பேசியது மட்டும்லாமல் அவ்வாறு செய்வது 'நல்லதல்ல' என்று குறிப்பிட்டமை பாப்பாண்டவரின் செயற்பாடுகளை விமர்சனம் செய்வதாகவும் அமைகின்றது. முதலமைச்சரின் இக் கூற்றுகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தர்க்கத்தைத் தர்க்கத்தால் வெல்லுங்கள், நியாயத்தை நியாயமான செயற்பாடுகள் மூலம் வெல்லுங்கள் என்று பல தடவைகள் மாகாண சபையில் கூறியுள்ளேன். தர்க்கத்தை தர்க்கத்தால் வெல்ல முடியாத முதலமைச்சர் எனது செயற்பாடுகளுக்குப் புதிய காரணங்களைக் கண்டு பிடித்தமையோடு அதனைப் பாப்பாண்டவரின் செயற்பாடுகளோடு



ஒப்பிட்டு விமர்சித்திருந்தமைக்காக கிறிஸ்தவ மக்களிடம் நான் மன்னிப்பைப் கேட்டுக் கொள்கின்றேன். – இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடு

சாவகச்சேரி, ஓக.19

மட்டுவில்வடக்குவேற்பிள்ளை வாசிகசாலை ஒழுங்கை வள்ளலார் தயானந்த இல்லத்தில் உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க மாநாடும் இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் செப்டெம்பர் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# நல்லூர் முருகனுக்கு காவடி எடுக்கும் அடியார்களுக்கு சில அறிவுறுத்தல்கள்

## யாழ்.மாநகர ஆணையாளர் விடுத்துள்ளார்

யாழ்ப்பாணம், ஓக.19

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர், தீர்த்தோற்சவ தினங்களில் தூக்குக்காவடி அல்லது பறவைக் காவடி எடுத்து நேர்த்திக்கடன் நிறைவேற்ற விரும்பும் அடியார்களுக்கு ஆலய நிர்வாகத்தினர் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர் என யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தூக்குக் காவடிகள் அல்லது பறவைக்காவடிகள் எடுத்துவரும் அடியார்கள் நல்லூர் கோவில் வடக்கு வீதியூடாக (சங்கிலியன் வீதியூடாக கோவில் வீதி வடக்குப் பக்கமாக) துர்க்காமணி மண்டபத்தை அடைந்து, வடக்கு வீதியில் குபேர கோபுர வாசலில் நேர்த்தியை முடிவுறுத்த வேண்டும்.

நேர்த்தியை முடிவுறுத்திய பின்னர் காவடியுடன் வந்த வாகனங்கள் நல்லூர் தெற்கு வீதியூடாக (கைலாசபிள்ளையார் கோவிலடிப் பக்கம்) வெளியேற வேண்டும்.

அத்துடன், தூக்குக்காவடி அல்லது பறவைக்காவடி எடுத்து நேர்த்தி செய்யும் அடியார்கள், சுவாமி வெளிவீதி உலா வந்து இருப்பிடத்தை அடையும் வரையிலான நேரத்தைக் கருத்திற் கொண்டு ஆலய வீதிக்குள் பிரவேசிக்க வேண்டும். – இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# 'இந்துசாதனம்' முதன்மைப் பத்திரிகை இன்று முதல் மீண்டும் வெளிவரும்

யாழ்ப்பாணம், ஓக.19

'இந்துசாதனம்' பத்திரிகை வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல.66, கல்லூரி வீதி, நீராவியடியில் உள்ள சைவ பரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சாதனம் பத்திரிகை 1889 ஆம் ஆண்டு முதல் வெளிவந்துகொண்டிருக்கும் ஈழத்தின் முன்னணிப் பத்திரிகை ஆகும்.

இதன் முதற் பதிப்பு கடந்த 1889 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால், அவர்களின் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. ஆரம்பத்தில் மாதம் இருமுறைப் பத்திரிகையாக புதன்கிழமைகளில் வெளிவந்தது.

முதலில் தமிழ் மொழியில் மாத் திரம் வெளிவந்த இந்து சாதனம் பத்திரிகை, 1899 ஜூலை 5 ஆம் திகதி முதல் ஆங்கில மொழியிலும் வெளிவர ஆரம்பித்தது. அன்று முதல் ஆங்கிலப் பத்திரிகை வாராந்தப் பதிப்பாக வெளிவந்தது.

1906 ஜூலை 11 இலிருந்து தமிழ்ப் பத்திரிகை தனியாக மாதம் இரு முறை வெளிவந்தது. அதன் பின்னர் 1913 ஜூலை 10 ஆம் திகதியில் இருந்து ஆங்கிலப் பத்திரிகை மாதம் இரு முறையும் தமிழில் வாரம் ஒரு முறையும் வெளிவந்தது.

காலப்போக்கில் ஆங்கிலப் பதிப்பு நின்றுபோக தமிழில் மாதம் ஒரு முறைப் பத்திரிகையாக இது வெளிவந்துகொண்டிருந்தது. தவிர்க்கமுடியாத காரணங்களால் கடந்த சில வருடங்களாக வெளிவராத இப்பத்திரிகை சைவ அபிமானிகளின் முயற்சியால் இன்று முதல் மீண்டும் வெளிவரவுள்ளது. இது மாதம் ஒருமுறை பத்திரிகையாக வெளிவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பிரபாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான பேச்சுக்களிலும், அமைதி முயற்சிகளிலும் நடுநிலையாளராகப் பங்கேற்ற எரிக் சொல்ஹெய்ம் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் கொண்டிருந்த உறவு, நட்பு ரீதியானதா அல்லது அதனை விடவும் அதிகமானதா என்று இந்திய ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்துள்ள எரிக் சொல்ஹெய்ம் –

உலகிலுள்ள வேறெந்த வெளிநாட்டவரையும் விட, பிரபாகரனை நான் அதிகமாக – அடிக்கடி – சந்தித்திருக்கிறேன். அவர் தமிழ் மக்களைப் பொதுவாகச் சந்திப்பது வழக்கம்.

இலங்கை முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவை ஒருமுறை சந்தித்திருக்கிறார். சில சிங்களவர்களையும் சந்தித்திருக்கிறார். ஆனால் தமிழ் மக்களை அவர் எப்போதும் சந்தித்து வந்தார்.

அவருடன் இன்னும் கூடுதலான நேரத்தை செலவிட்டிருந்தால், நாம் பெரும்பாலும், அவர் மீது இன்னும் செல்வாக்குச் செலுத்தியிருக்க முடியும்.

பிரச்சினைகள் பற்றி பேசுவதன் மூலம் அவருடன் தனிப்பட்ட உறவை ஏற்படுத்த நாங்கள் முயன்றோம். அவர் உண்மையில் அதுபற்றி அக்கறை கொண்டிருந்தார்.

அவர் நிச்சயம் திரைப்படங்களில் ஆர்வம் கொண்டிருந்தார். உணவு விடயத்தில், அவர் ஒரு நல்ல சமையற்காரராக அறியப்பட்டார். இயற்கை மீது ஆர்வம் கொண்டிருந்தார்.

ஆனாலும் தனிப்பட்ட உறவை வளர்ப்பது கடினமாக இருந்தது. ஏனென்றால், எமக்கு மட்டுப்படுத்தப்பட்ட நேரமே இருந் தது. மேலும் இலங்கை அரசாங்கத்தினால் நாம் வடக்கிற்குச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட வில்லை.

அதை விட, மொழித் தடையும் இருந்தது. அவர் தமிழில் பேசுவதை புரிந்து கொள்ள எமக்கு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டார்.

இறுதியாக அவர் வெளிப்படையாக திறந்த நிலையில் இல்லாத பாத்திர வகையாகவே இருந்தார்.

கவர்ச்சிகரமானவராக, ஆனால், இன்னும் அதிகம் மூடிய, எச்சரிக்கையுடன் அவர் இருந்தார். – என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேட்டியில் புலித்தேவன் குறித்தும் சொல்ஹெய்ம் குறிப்பிட்டார்.

அது மே 17 ஆம் திகதி. அது நோர்வேயின் தேசிய நாளும் கூட. அதனால் நினைவில் வைத்திருக்கிறேன்.

ஒஸ்லோவில் அணிவகுப்புக்காக நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது, புலித்தேவனிடம் இருந்து அழைப்பு வந்தது.

அவர் விடுதலைப் புலிகளின் மிகச் சிறந்த உறுப்பினர்களில் ஒருவர். விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் தலைவராக இருந்தார்.

இலங்கை இராணுவத்தினரிடம் தாங்கள் சரணடைய விரும்புகின்றனர் எனவும் அதற்கு எம்மால் உதவ முடியுமா என்றும் அவர் எம்மிடம் கேட்டார்.

நான் அவருடன் நேரடியாகப் பேசவில்லை. ஆனால், நாங்கள் தலையீடு செய்வதற்கு மிகவும் தாமதமாகிவிட்டது என்று நோர்வேஜிய சகா ஒருவர் அவருக்கு கூறினார். ஏனென்றால் போர் முடிவுக் கட்டத்தை நெருங்கி விட்டது.

நாம் தலையீடு செய்வதற்கு சாத்தியங்கள் இருந்த போது, போராட்டத்தைக் கைவிடுவதற்கு முன்னர் நாங்கள் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கியிருந்தோம் என்பதை நாம் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினோம். ஆனால் இப்போது அது மிகவும் தாமதமாகி விட்டது.

பெரியதொரு வெள்ளைக் கொடியை ஏந்திச் செல்லுங்கள். ஒலிபெருக்கிகள் மூலமோ வேறெந்த வழியிலோ உங்களின் எண்ணத்தை, இலங்கை ஆயுதப் படைகளுக்கு தெரியப்படுத்துங்கள், என்பதைத் தான் எம்மால் உங்களுக்கு கூற முடியும் என்றோம்.

எமது பக்கத்தில் இருந்து இலங்கை தலைவர்களுக்கு சரணடைய விரும்பும் உங்களின் விருப்பம் தெரியப்படுத்தப்படும் என்று அவரிடம் நாம் கூறினோம்.

அதன்படியே, நிச்சயமாக அதனை இலங்கை தலைவர்களுக்கு தெரியப்படுத்தினோம். நாங்கள் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆலோசகரான பஸில் ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தினோம்.

நாங்கள் மட்டுமல்ல, முக்கியமான சில தமிழர்கள் மூலமும் புலிகள் அதனைச் செய்தனர். சில இந்தியா இடைத்தரகர்களும் கூட, இலங்கை தலைமைக்கு தகவல் அனுப்பினார்கள் என்று நான் நினைக்கிறேன்.

ஒரு நாள் கழித்து. நடேசனும், புலித்தேவனும் கொல்லப்பட்டு விட்டனர் என எங்களுக்குத் தகவல் கிடைத்தது. அவர்களின் மரணம் நடந்த சரியான சூழ்நிலைகள் தொடர்பாக இன்னமும் தெரியவில்லை.

அந்த நேரத்தில் அவர்கள் பிரபாகரனுடன் இருந்திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆனாலும், சரியாக எனக்குத் தெரியவில்லை. பிரபாகரன் எப்படிக் கொல்லப்பட்டார் என்றும் எனக்குத் தெரியவில்லை.

இந்தக் கொலைகள் தொடர்பாக பெரியதொரு கேள்விக்குறி உள்ளது. ஏன் அவர்கள் சரணடைதலை ஏற்றுக் கொள்ளவில்லை? நீதிமன்றத்தில் நிறுத்தாமல், அவர்களை ஏன் கொன்றார்கள். என்று கேள்வி எழுப்பியுள்ளார் சொல்ஹெய்ம்.




காலைக்கதிர் மகிழ வரும் கண்கவர் சப்பறம்
காத்திரமாய் மாலைவரும் கந்தனின் சப்பைரதம்
வேலைப் பிடிக்கவென விண்ணவரும் வந்திடுவர்
வேற்றுமைகள் விலகிவிடும் வரம்பெறுவீர் நல்லூரில்!

– கே.எஸ்.சிவஞானராஜா.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தாராண்மை காட்டுக!

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை வடக்கு மாகாண சபை மிக முக்கியமானது.

மூன்று தசாப்தகால அஹிம்சைப் போராட்டம், அதைத் தொடர்ந்து மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டம் என்று இலங்கைத் தமிழினம் பெரும் விலை கொடுத்த பின்னர், தமிழினத்தின் தகுதி நிலையை உரசிப் பார்த்துப் பரிசீலிப்பதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பு- கருவி - வடக்கு மாகாண சபை.

அதைப் போட்டுடைக்குமாற் போல் நடந்து கொள்வது, நமது தமிழினத்தை உலகம் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்க வழிசமைப்பதாகவே இருக்கும்.

தனி மனித 'ஈகோ'களைத் துறந்து மாகாண சபை உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து பணியாற்றும் அவசியம் எழுந்துள்ளது. அதனைத் தமிழ் மக்கள் வலியுறுத்த வேண்டிய ஒரு சூழல் உருவாகியிருக்கின்றது எனக் கருதுகிறோம்.

வடக்கு முதல்வர் கூறுகின்றமைபோல "சனி, ஞாயிறு பார்க்காமல், ஒவ்வொரு நாளும் 15 இலிருந்து 18 மணித்தியாலங்கள் வேலை செய்து கொண்டிருத்தல்" மட்டும் பணிச் சிறப்பாகி விடாது.

மணித்தியாலக் கணக்காக அமர்ந்திருந்து, உரை தயாரித்து, எழுதி வந்து, நீண்ட பிரசாரங்கள் செய்வது மட்டும் காரிய சித்தியாகி விடாது.

இல்லையேல் இரவிரவாக இருந்து கோவைகளைப் புரட்டிப் பார்த்து, கையொப்பமிட்டு, கடிதங்கள், குறிப்புகள் எழுதுவது மட்டும் உயர்ந்த நிர்வாகமாகி விடாது.

களத்தில் என்ன சாதித்தோம், எவற்றைப் பெறுபேறாக விட்டுச் செல்கிறோம் என்பதில்தான் சாதனையை அளவிட முடியும்.

ஏற்கனவே ஆளும் தரப்பில் பெரும்பான்மையினரின் ஆதரவுப் பலத்தை இழந்தாயிற்று. ஒட்டு மொத்த சபையிலும் ஆதரவுப் பலம் பற்றிய தராசு முள்ளும் அப்படித்தான் எதிர்த்திசையில் நிற்கின்றது. சபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு என்று ஒன்று நடக்கவேயில்லை என்பதைத் தவிர, முதல்வர் விக்னேஸ்வரன் இப்போது கொண்டு செல்வது தார்மீகப்படி ஒரு 'மைனாரிட்டி' அரசு என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த நிலைமையை அடியோடு மாற்றி, இதிலிருந்து மீண்டு, வலுவான - திடமான - சிறப்பான - வினைத்திறன் மிக்க - மாகாண நிர்வாகம் ஒன்றை வடக்கு மாகாண சபையில் முன்னெடுப்பதாயின் அதற்கு வழி என்ன?

சூழ்நிலையைப் புரிந்து கொண்டு மாகாண சபையில் ஆளும் தரப்பு தனக்குள் உள்ள சிறுமைத்தனமான வேறுபாடுகளைக் களைந்து விட்டு, ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். அப்படிச் செயற்பட்டால் மட்டுமே அடுத்த பதினான்கு மாத காலத்துக்குள் - இந்த மாகாண சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் - ஏதாவது விடயங்களை உருப்படியாகச் சாதித்துகொள்ள முடியும்.

அதற்கு முதலில், முதல்வரும், அவருக்குப் பின்னாலும், எதிர்ப்புறத்திலும் அணி திரண்டிருக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களும் தங்களுக்கு இடையிலான சிறுமைத்தனமான வேறுபாடுகளைத் துறந்துவிட்டு, கூட்டமைப்பினதும், ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் நலனை மட்டுமே சிந்தித்து, முன்னிறுத்தி, ஒன்றுபட்டுச் செயற்பட முன்வரவேண்டும்.

அப்படிச் செயற்பட முன்வருவார்களா என்பதே கேள்வி.

முதலமைச்சர் போன்ற - முன்னாள் நீதியரசர் என்ற உயர்நிலையில் இருக்கின்ற - மிகவும் மதிக்கப்படுகின்ற ஒரு ஸ்தானத்தில் விளங்குகின்ற - சி.வீ.விக்னேஸ்வரன் போன்றோர்தான் இதில் தங்களின் பெருந்தன்மையை (Magnanimity) முதலில் காட்ட வேண்டும். ஏனையோருக்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

கசப்புணர்வுகளை மறந்து, வேறுபாடுகளைத் துறந்து, முரண்பாடுகளைக் களைந்து, மோதல்களைத் தவிர்த்து, குரோதங்களைக் கைவிட்டு, ஐக்கியமாகச் செயற்படுவதற்கான முன்னுதாரண மாகக் காய் நகர்த்த வேண்டியவர் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களே.

சிறுபிள்ளைத்தனமாக, மாகாண உறுப்பினர்கள் சிலருடன் முட்டி மோதினோம் என்பதற்காக சதா அவர்களுடன் முரணிலை கொண்டு, எதிரணியாக மோத வேண்டும் என்று அர்த்தம் கொள்வது தவறு. இதனை அண்மையில் முதல்வர் விக்னேஸ்வரனே தமது உரை ஒன்றில் வலியுறுத்தியிருந்தார்.

தனிமனித குரோதங்களைத் துறந்து அன்புரிமையுடன் பழகுவோம் என்று அவர் அழைப்பு விடுத்திருந்தார். அதனையே அவரைச் செய்யும்படி நாமும் இப்போது உரிமையோடு கேட்க விழைகிறோம்.

வடக்கு மாகாண சபையில் ஆளும் தரப்பினர் ஒருவரை ஒருவர் மாறி மாறிக் குற்றம் சுமத்தியமையினால், நிலைமை எதுவரை சென்று நிக்கின்றது என்பது சம்பந்தப்பட்டோருக்கு இப்போது நன்கு புரிந்திருக்கும். இதிலிருந்து விடுபடுவதாயின் அதற்கு ஒரே வழி, பழைய நிலைமைக்குத் திரும்புவதுதான். அதையே மாகாண சபை உறுப்பினர் சிவயோகனும் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண சபையின் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

முன்னர், ஆரம்பத்திலிருந்து கடந்த மாதம் வரை பணியாற்றிய நான்கு அமைச்சர்களையும் முதல்வர் தாமே அழைப்பித்து, அவர்களுக்கு அந்த நான்கு அமைச்சுக்களையும் மீள வழங்கி, ஒரு புதிய நட்புரிமை நிலையில் - அவர்கள் மீதான தனது வலிமையான கட்டுப்பாட்டுப் பிடியுடன் - நிர்வாகத்தைக் கொண்டு செல்ல வேண்டும்.

கூட்டமைப்பினதும், தமிழ் மக்களினதும் நல்ல எதிர்காலம் கருதி, இப்போது தற்காலிகமாக அமைச்சர்கள் பதவிகளை ஏற்றவர்களும் விட்டுக் கொடுத்து, புதிய சகாப்தம் ஒன்று உருவாக்குவதற்காகப் பெருந்தன்மையோடு தியாகம் புரிய முன்வர வேண்டும்.

அவ்வாறு முன்வந்தால் சிறப்பே. மக்கள் உள்ளார்ந்து பூரிப்படைவர்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஜனவரியில் நடத்தும் வாய்ப்பு



கொழும்பு, ஒக. 19

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்தப்படும் என மீன்பிடித்துறை நீரியல் வள அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவது குறித்த வர்த்தமானி அறிவித்தல் ஒக்ரோபர் அல்லது நவம்பர் மாதம் வெளிவரும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்கு அரசு எதிர்பார்க்கின்றது.

தேர்தல் குறித்த வர்த்தமானி அறிவித்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் தினத்தைத் தேர்தல் ஆணைக்குழு தலைவரால் அறிவிக்க முடியும்.

இந்த ஆண்டு டிசெம்பர் அல்லது அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் பல்வேறு ஊகங்களை காலத்திற்குக் காலம் வெளியிட்டு வருகின்ற போதிலும், இதுவரையில் திடமான ஒரு திகதி அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னரும் அமைச்சர் மஹிந்த அமரவீர உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதி பற்றிய ஊகங்களை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொன்சேகாவுக்கு அல்லது அஜித் பெரேராவுக்கு நீதி அமைச்சை வழங்கக் கோருகிறார் ரஞ்சன்

கொழும்பு, ஒக. 19

நீதி அமைச்சு பதவியிலிருந்து விஜயதாஸ ராஜபக்ஷ விலகுவாராயின் அந்த பதவியை பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா அல்லது அஜித் பீ பெரேராவுக்கு வழங்குங்கள், பிரதி அமைச்சு பதவியை எனக்குத் தாருங்கள் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இதை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக 99 சதவீத எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், விசேட நீதிமன்றம் ஒன்றை அமைத்து விசாரணை நடத்த பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டார்.

விஜயதாஸவுக்கு நீதி அமைச்சை விட சிறந்த பதவி ஒன்று வழங்கப்படவுள்ளது. இதனால், அவராகவே முன்வந்து நீதி அமைச்சு பதவியை இராஜினாமா செய்வார் என்று எதிர்பார்க்கிறார் எனவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக, பெண்கள் விவகாரம் தொடர்பான அமைச்சே விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு பொருத்தமாக இருக்கும். அவ்வாறான சாதாரண அமைச்சை அவர் சிறப்பாக நடத்திச் செல்வார் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், நீதி அமைச்சுப்பதவி என்பது திருடர்களுடன் 'டீல்' போட்டு, பண்பு இல்லாத திருடர்களை சிறையில் அடைப்பவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இதன்படி சரத் பொன்சேகா, அஜித் பீ பெரேரா அல்லது எனக்கு வழங்குங்கள். அல்லது பிரதி அமைச்சு பதவியையாவது எனக்கு வழங்குங்கள் என தாம் கோரிக்கை விடுத்தார் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை வவுனியாவில் சந்தித்த சர்வதேச பிரதிநிதிகள்!





வவுனியா, ஒக. 19

காணாமற் போனோரின் உறவினர்களை சர்வதேச பிரதிநிதிகள் நேற்று முன்தினம் இரவு 7 மணி தொடக்கம் 7.45மணிவரை வவுனியாவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்கள்.

ஐ.நா அலுவலக விசேட பணியாளர் தோமஸ் வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்போது, ஜனாதிபதியுடன் இருக்கும் காணாமல் ஆக்கப்பட்ட பெண்பிள்ளைகள் சம்பந்தமாகவும், எவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்பது தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதுடன் காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளின் தற்போதைய நிலைமை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, தாம் அரசுக்கு இது வரையில் அழுத்தம் கொடுத்துக் கொண்டு இருப்பதாகவும், இதற்கு முறையான திட்டங்களை நாங்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளதோடு, வெகுவிரைவில் இதற்கு தீர்வைப் பெற்றுத்தருவோம் எனவும் ஐ.நா. அலுவலக விசேட பணிப்பாளர் தெரிவித்தார்.

(க-100)

ஆரோக்கிய உணவுகளுக்கு முன்னுரிமை கொடுப்போம்

சிறுவர்களுக்கு இனிப்புணவுகளை அறிமுகப் படுத்துவதை பிற்போடுவோம். ஆரோக்கிய உணவுகள் உண்பதனை ஊக்கப்படுத்தி முன்னுரிமைப்படுத்துவோம்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

20.08.2017
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : பூசம் மாலை 6.18 வரை
திதி : சதுர்த்தசி பி.இ 2.36 வரை
சுபநேரம் : 9.05 –10.35 வரை
இராகுகாலம் : 4.35 – 6.05 வரை

## இறுதியாக நடந்த ஜனாதிபதி தேர்தலின்போது

# எதிர்கொண்ட கடின இலக்கை எட்ட ரணிலின் விட்டுக்கொடுப்பே காரணம்!

கொழும்பு, ஓக. 19

இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது பொதுவேட்பாளராக யாரை நிறுத்துவது என்ற நெருக்கடி சூழல் உருவானது.

அந்தத் தருணத்தில் அனைவருமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரையே பரிந்துரைத்தார்கள். இருப்பினும் நானே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரை நம்பிக்கையின் பேரில் பரிந்துரைத்தேன் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அப்போதைய பெருந்தன்மையுனான விட்டுக் கொடுப்பே நாம் எதிர்கொண்ட கடுமையான இலக்கை இலகுவில் அடைவதற்கான ஆரம் பப் புள்ளியாக அமைந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாற்பது ஆண்டு கால அரசியல் பயணத்தின் முக்கியமான சந்தர்ப்பங்களைச் சித்திரிக்கும் ரணிலின் தொலைநோக்கு எனும் புகைப்பட கண்காட்சி நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2015 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராகயாரை நிறுத்துவது என்பது தொடர்பில் பெருமளவில் சிந்திக்க வேண்டியேற்பட்டது.

அவ்வாறானதொரு நெருக்கடியான சூழ்நிலையில் அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்குப் பரிந்துரைத்திருந்தனர்.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் நான் ஜனாதிபதி வேட்பாளருக்கு அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக செயற்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனபொருத்தமானவர் என்றேன்.

அதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் அவர் நம்பிக்கைக்குரியவரானவரா எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு நான் அவர் எனக்கு அறிந்த வகையில் மிகுந்த நம்பிக்கைக்குரியவர் என்றேன். உடனே பிரதமர் இந்தத் தீர்மானத்தை நான் கட்சியின் முன்னிலையில் அறிவிக்கின்றேன் என்றார்.



முன்னாள் ஜனாதிபதி பெருமிதம்

மறுநாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக தேர்தல் களத்தில் இறங்குவார் என எதிர்பார்த்திருந்த நிலையில் அவர் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனகளம் இறங்குவார் என்ற தீர்மானத்தை பகிரங்கமாக அறிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்போது அந்த தீர்மானத்தை இலகுவில் ஏற்றுக்கொண்டதும் அவருடைய விட்டுக்கொடுப்பின் விளைவாகவே நாம் எதிர்கொண்ட கடுமையான இலக்கை இலகுவில் எட்ட முடிந்தது. நல்லாட்சியும் இரு கட்சிகளுடனான புரிந்துணர்வுடன் ஏற்படுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## தேசிய லொத்தர் சபைகள் மீண்டும் நிதியமைச்சின் கீழ்!



கொழும்பு, ஓக. 19

முன்னாள் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்கவின் கீழ் கொண்டுவரப்பட்ட தேசிய லொத்தர் சபை, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் கீழ், கொண்டு வரப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி, ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவின்கையொப்பத்துடன் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ளது.

கடந்தசில மாதங்களுக்கு முன்னர்நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது, அவரது பலத்த வற்புறுத்தல் காரணமாக நிதிஅமைச்சின் கீழ் இயங்கி வந்த அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியன வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரம் காரணமாக ரவி கருணாநாயக்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சுப் பதவியிலிருந்து ராஜினாமா செய்திருந்தார்.

இதனையடுத்து, லொத்தர் சபைகள் இரண்டையும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பட்டியலிலிருந்து அகற்றி அவற்றை மீண்டும் நிதியமைச்சின் கீழ்கொண்டுவரப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் காலபோக செய்கை; விவசாயிகளுக்கு விதைநெல் தேவை!

## மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தகவல்



கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் காலபோக செய்கைக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 500 புசல் விதை நெல் தேவையாகவுள்ளது என மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கின் பெரிய விவசாய மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்தும் நிலவி வந்த கடும் வறட்சி காரணமாக பயிர் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், விதை நெல்லுக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், விதை நெல் தேவையை ஓரளவு பூர்த்திசெய்யும்வகையில் மாவட்டத்திலுள்ள இரணை மடுக்குளம், கல்மடுக்குளம், புதுமுறிப்புக்குளம், அக்கராயன்குளம், வன்னேரிக்குளம் உள்ளிட்ட குளங்களில் மிகக் குறைந்தளவான சிறுபோக செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கையின் அறுவடையின் போது கிடைக்கப்பெறும் நெல்லைவிட மேலும் விதை நெல் தேவை காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையில் ஏக்கருக்கு 80 தொடக்கம் 90 புசல் வரையான விளைச்சல் காணப்படுகின்றது.

காலம் பிந்திய விதைப்புக்களில் சந்துக்குத்தியின் தாக்கம் காணப்படுகின்றது எனக் குறிப்பிட்ட அவர், எதிர்வரும் காலபோக செய்கைக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 500 புசல் விதைநெல் தேவையாக உள்ளது.

இதில் விவசாயிகளிடம் தமது தேவைக்கு வைத்திருக்கக் கூடிய விதைநெல் சிறுபோக உற்பத்தி என்பவற்றை விட 21 ஆயிரத்து 500 புசல் நெல் தேவையாக இருக்கும்.

எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்களினூடாக கச்சான், பயறு உழுந்து போன்ற பயிர்களை பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

## விசேட அறிக்கையை வெளியிடவுள்ளார் விஜயதாஸ!

கொழும்பு, ஓக. 19

நீதிஅமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நாளை மறுதினம் திங்கட்கிழமை விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுக குத்தகை தொடர்பில் அமைச்சரவை தீர்மானத்துக்கு எதிராகக் கருத்து வெளியிட்டார் என்று கூறி நேற்றுமுன்தினம் அவர்சாந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில் அவர் தமது நிலைப்பாட்டை விளக்கி திங்கட்கிழமை விசேட அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

அதற்கு முன்னர் அவர் பிர தமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கவுள்ளார் என அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

# மங்களவின் புதிய கடன் திட்டங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்தும்!

## டக்ளஸ் எம்.பி. கூறுகிறார்

நிதிஅமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ள புதிய கடன் திட்டங்கள் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கான வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள கைகொடுக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நிதிஅமைச்சு வெளியிட்டுள்ள வரிகள் குறைப்பு, வரிநீக்கம் மற்றும் கடன்திட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வட மாகாணம் அடங்கலாக நாட்டில் அண்மைக்காலமாக பல மாகாணங்கள் கடும் வறட்சிக்கு முகங்கொடுத்து வருகின்றன.

இந்தநிலையில், பாதிக்கப்பட்டுள்ள விவசாய மக்களுக்கு நட்டஈடுகள்வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் முன்வைத்துள்ளோம்.

அதே நேரம், விவசாயிகளுக்கென தற்போது அறிமுகஞ் செய்யப்படவிருக்கும் 5 லட்சம் ரூபா கடன் திட்டம் எமது விவசாய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

அதேபோன்று வீட்டுக்கடன், சூரிய கல கடன், பாடசாலை வாகனங்களுக்கான கடன், தொழில் முயற்சிகளுக்கான கடன், ஊடகவியலாளர்களுக்கான கடன் போன்ற திட்டங்களும் எமது மக்களுக்கு மிகவும் பயனுள்ளவை.



மேற்படி கடன் தொகைகளின் வட்டியில் அதிக விகிதத்தை அரசு பொறுப்பேற்றிருப்பதும் பாராட்டத்தக்கதோர் ஏற்பாடாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

# தேர்தலில் வெற்றிபெறும் பெண்கள் மீது அரசியல் தலைமைகளுக்கு பயம்!

வவுனியா, ஒக.19

தேர்தலில் வெற்றிபெறும் பெண்களைக் கண்டால் அரசியல் தலைமைகள் தமது ஆசனம் போய்விடும் என்ற பயத்துடன் இருக்கின்றனர் என வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சிக்கன கடன் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் அலுவலகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சர் என்ற வகையில் 5 மாவட்ட அரச அதிபர்களையும் பிரதேச செயலாளர் களையும் நேரடியாகச் சந்தித்து ஒரு முகப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளேன். மக்களுக்கான சேவையில் நாங்கள் பிரிந்து நின்று சேவை ஆற்ற முடியாது.

இன்று வடக்கிற்கு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாவற்றையும் மத்தியே தீர்மானிக்கின்றது. அந்த நபர்கள் தீர்மானித்து கொண்டு வரும் பல அபிவிருத்தி திட்டங்கள் இங்கு தோற்றுப் போகின்றன. ஆகவே, வடக்கு மாகாணத்துடன் சேர்ந்தே இந்த அபிவிருத்தியை செய்யுங்கள் எனக் கூறும்போது அவ்வாறான உடன்பாட்டுக்கு அரசு வரத் தயாராக இல்லை.

எங்களிடம் உள்ள நிதியோ மிகச்சொற்பமான நிதி. ஆனால், தேவை நிறையவே உள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எங்கள் மாகாணத்தையும் ஏனைய தென் மாகாணங்களையும் ஒரே தராசில் வைத்து பார்க்கமுடியாது. நாங்கள் அடிமட்டத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட வேண்டியவர்களாக உள்ளோம்.

இது தொடர்பாக பலமுறை நாங்கள் மாகாணசபையிலும் பேசியிருக்கின்றோம். ஜனாதிபதி பிரதமருடன் பலமுறை பேசியும் அவர்கள் அதனை விட்டுக்கொடுப்பவர்களாக இல்லை.

ஆகவே, நாங்கள் எங்களிடம் உள்ள நிதியில் சேவை செய்வதுடன் சந்திக்கும் வெளிநாட்டு தூதுவர்களூடாக சில திட்டங்களை கோர உள்ளோம். அவர்கள் நிச்சயமாக அதனைச் செய்வார்கள். எங்களுடைய கலாசாரத்தை மீறிய தொழில் முயற்சிகளை ஆரம் பிக்க முடியாது.

எங்களுடைய கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்கும் அபிவிருத்திகளை என்றும் நாம் எதிர்ப்பவர்கள் அல்லர். ஆனால், அதனை செய்ய விடாமல் பல தடைகள் வந்துகொண்டிருக்கின்றன.

உண்மையாகவும் விசுவாசமாகவும் நேர்மையாகவும் மக்களுக்கு சேவைசெய்வேன் என்பதால் 5 திணைக் களங்களை உள்ளடக்கி எனக்கு அமைச்சுப்பதவி தரப்பட்டுள்ளது. நிச்சயமாக திறம்பட செயலாற்ற என்னால் முடியும்.

ஏனெனில் நான் போரின் முடிவில் நிராயுதபாணியாக எனது கணவரை கையளித்து விட்டு 3 பெண் பிள்ளைகளுடன் தாயாக தந்தையாக நண்பியாக சகோதரியாக என எல்லா பாத்திரத்தையும் வகித்துள்ளேன்.

ஒரு பெண் கணவன் இல்லாமல் எவ்வாறு தன்னையும் பாதுகாத்து தனது பிள்ளைகளையும் பாதுகாத்து வாழ முடியும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தவள். ஆகவே, பெண்களின் பிரச்சினையை புதிதாக யாரும் சொல்லத் தேவையில்லை.

போரின் பின்னரான அதிகளவான பாதிப்புக்குள்ளான வட மாகாண மகளிருக்கான தனியான திணைக்களமோ அல்லது அலகோ இல்லை. ஆகவே நாங்கள் அதனை ஒரு பகுதியாக ஆரம்பிப்பதற்கு திட்டமொன்றைத் தயாரிக்கின்றோம்.





வவுனியா நிகழ்வில் வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன்!

வட மாகாணத்தில் பல பிரச்சினைகளை பெண்கள் எதிர்கொள்கின்றார்கள். ஆகவே, அதற்கான அலகு வட மாகாணத்தில் இயங்கவேண்டும்.

தென்னிலங்கையிலிருந்து யார் யாரோ பெண்கள் அமைப்புக்கள் வருகின்றார்கள். பேசுகின்றார்கள் என்ன செய்கின்றார்கள்என்பது தெரியவில்லை. ஆனால், சர்வதேச நிதிமூலங்களை பெற்றுக்கொள்ளும் ஆற்றல் உள்ளவர்காளக உள்ளார்கள். போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிதியீட்டம் எனப் பெற்றுக் கொண்டு எமது பெண்களுக்கு எதனையும் செய்ததாகத் தெரியவில்லை.

ஆகவே, நாங்கள் கட்டுப்பாட்டைக்கொண்டுவரவேண்டும். வடக்கில் அரசசார்பற்ற நிறுவனங்கள் இயங்குகின்றன என்றால் அது வட மாகாண சபையில் அனுமதியை பெற்றிருக்கவேண்டும். ஆகவே, தான் எங்களுக்கு வழங்கப்படும் நிதி எங்கே செல்கின்றது என்பது தெரியும்.

நாங்கள் மகளிர் விவகார கொள்கையை வகுத்துள்ளோம். புனர்வாழ்வு தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சரை நேரடியாகச் சென்று சந்தித்து போரால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு விசேட வேலைத் திட்டத்தை செய்து தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

அத்துடன், இராணுவத் தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சர் என்ற வகையில் அழுத்தங் களை கொடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளேன்.

இந் நிலையில் மக்களிடம் அதிக வாக்குகளைப் பெற்ற நான் சேவை செய்யவேண்டியது ஜனநாயக உரிமை. அவ்வாறு செய்யாமல் இருக்க முடியாது. மாகாணசபை உறுப்பினராக இருந்தபோதும் மக்களுக்கான சேவையை செய்து கொண்டே இருந்தேன்.

அரசியல் அரங்கில் இருந்து நான்வெளியேறிவிடமுடியாது. அரசியல் நோக்கத்தோடு இருந்து அரசியலுக்கு வந்தவள் அல்ல நான். நான் அரசியல் போராளியாக இருக்க முடியுமே தவிர அரசியல்வாதியாக இருக்க முடியாது. இவ்வாறான நிலையில் நான் மாட்டேன் மாட்டேன் என்கின்ற போது தான் இல்லை நீங்கள் அரசியலுக்கு வந்து உங்களைப் போன்ற பெண்களுக்கு உதவ வேண்டும் என்றார்கள்.

இப்போதுதான் நான் அரசியலுக்குவந்தேன்வெற்றியீட்டினேன். ஆனால் வெற்றயீட்டியபெண்களைத்தூக்கியெறிய வேண்டும் ஓரங்கட்டவேண்டும் என்ற எண்ணப்பாடு தற்போது இருக்கின்றது.

ஆனாலும், 30 வீதமான பெண் கள் அரசியலுக்கு வர வேண்டும் என்ற பிரசாரத்தை நான் செய்து வருகின்றேன். 52 வீதமான பெண்கள் உள்ள இடத்தில் 50 வீதமான பெண்களாவது அரசியலுக்குள் வரவேண்டும்.

நான்ஒரேயொருபெண்ணாக இருந்துகொண்டு இந்த அரசியலுக்குள் எவ்வாறு நெருக்குதல்படுகின்றேன். ஒடுக்கப்படுகின்றேன் என்பது எனது வேதனையான குரல். ஆகவே ,பெண்கள் அதிகளவில் அரசியலுக்குள் வரவேண்டும். அப்போதுதான் பலமாக இருக்கும்.

வெற்றியீட்டும் பெண்கள் என்றால் அரசியல் தலைமைகளுக்கு பயம். தங்களுடைய ஆசனம் அடிபட்டுப்போய் விடும் என்பதால் தோற்றுப் போகின்றஅல்லது மௌனமாக இருந்து தலையாட்டும் பெண்களை அரசியலுக்குள் கொண்டு வர அவர்கள் தயாராக இருப்பார்கள். ஆகவே, கிராமங்களில் இருந்து மக்களுக்கு சேவை செய்யும் பெண்கள் அரசியலுக்குள் வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-100)

## வாழைச்சேனை மத்திய ப.நோ.கூட்டுறவுச் சங்க அலுவலக கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு!





மட்டக்களப்பு, ஓக.19

வாழைச்சேனை - கோறளைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சரின் பன்முகப்படுத்தப்பட்ட 20 லட்சம் ரூபா நிதி ஒதுக் கீட்டில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு, வாழைச்சேனை கோறளைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம்.எப்.எம்.ஜௌபர் தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை, நிகழ்வில் கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி , மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுஅபிவிருத்திஉதவிஆணையாளர் க.கனகசுந்தரம், மட்டக்களப்புக் கூட்டுறவு தலைமையக உத்தியோகத்தர்களான கே.மகேஸ்வரன், எஸ்.எல்.ஏ.காதர் உட்படப் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

## மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய கொடியேற்ற தின நிகழ்வுகள்!

மட்டக்களப்பு, ஓக.19

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் கொடியேற்ற நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து இருபது நாள்கள் சிறப்புத் திருவிழாக்கள் நடைபெற்று 21 ஆம் நாளான எதிர்வரும் 06 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

மண்டூர் கந்தசுவாமி ஆலயம் மட்டக்களப்பு திருப்படைக் கோயில்களில் ஒன்றாக விளங்கினாலும் ஆகம நெறிசாரா பூஜைகள் நிகழும் ஆலயங் களில் கதிர்



காமத்தை ஒத்திருப்பதால் சின்னக் கதிர்காமம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் தலமாகும்.

# இந்திய இராணுவத்தின் தென் பிராந்தியத் தளபதி இலங்கை விஜயம்: இன்று யாழ் வருகிறார்!

கொழும்பு, ஓக. 19

இந்திய இராணுவத்தின் தென்பிராந்தியத் தளபதி லெப்.ஜெனரல் பி.எம்.ஹரிஸ், இலங்கைக்கான நான்கு நாள்கள் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவருடன் உயர் அதிகாரிகள் குழுவொன்றும் கொழும்பு வந்துள்ளது.

தென்பிராந்திய தலைமையக நடவடிக்கை தளபதி மேஜர் ஜெனரல் வி.கே.சிங், லெப். ஜெனரல் ஹரிசின் இராணுவ செயலர் கேணல் கௌசல் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் காலை இராணுவத் தலைமையகத்துக்குச் சென்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடினர்.



இரண்டு நாடுகளின் இராணுவங்களுக்கும் இடையிலான பயிற்சி ஒத்துழைப்புகளை அதிகரிப்பது குறித்து இந்தப் பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவம் அண்மைய ஆண்டுகளில் நல்ல அனுபவங்களைப் பெற்றிருக்கிறது என்றும் இலங்கையின் கொமாண்டோக்கள், சிறப்புப் படையினரிடமும் பயிற்சி மையங்களிலும் கூடுதலான இந்திய இராணுவ அதிகாரிகளை அனுப்பி பயிற்றுவிக்க விரும்புகிறோம் என்றும் ஜெனரல் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.



இலங்கை இராணுவம் இயந்திர காலாட்படைப் பிரிவை உருவாக்கிய போது, இந்திய இராணுவத்தின் இயந்திர காலாட்படைப்பிரிவு வழங்கிய உதவிகளை சிறிலங்கா இராணுவத் தளபதி இதன் போது, நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார்.

இந்திய இராணுவ அதிகாரிகள் குழு, இலங்கைப் பாதுகாப்புச் செயலர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், முப்படைகளின் தளபதிகள், கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி, யாழ். படைகளின் தளபதி ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

இந்திய இராணுவத்தின் தென்பிராந்தியத்தளபதி ஜெனரல் ஹரிஸ் இன்று யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில், இராச வீதி, கல்வியங்காடு பகுதியில் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் உயிரிழந்த இந்தியப் படையினர் நினைவாக அமைக்கப்பட்ட நினைவிடத்தை இலங்கை படையினர் துப்புரவு செய்து வருகின்றனர்.

இங்கு லெப்.ஜெனரல் ஹரிஸ் அஞ்சலி செலுத்தவுள்ளார் என்றும் தெரியவருகிறது.

## இலங்கைப் பாதுகாப்புச் செயலருடன் ரஷ்ய பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பு!



கொழும்பு, ஓக. 19

இலங்கைக்கானரஷ்ய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் டிமிற்றி ஏ மிக் கெலோவ்ஸ்கி இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பாக இருந்தது என்றும் இதன் போது இருதரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில், இலங்கைப் பாதுகாப்புச் செயலராக, கபில வைத்தியரத்ன நியமிக்கப்பட்ட பின்னர், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர்கள் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## மஹிந்த உயிருக்கு ஆபத்தாம்! சிங்கள ஊடகத்தில் செய்தி

கொழும்பு, ஓக. 19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என சிங்கள ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது.



மஹிந்த தொடர்பில் தகவல் சேகரிப்பதற்காக பொலிஸாரால் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழுவின் மூலம், மஹிந்தவைச் சந்திக்க வருபவர்கள் தொடர்பில்தகவல்பெற்றுக்கொள்ளப்படுகிறது என்றும் திடீரென ஆபத்தை ஏற்படுத்தும் செயற்பாடு ஒன்று பொலிஸ் குழுவால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ தனக்கு நெருக்கமானவர்களை சந்திப்பதற்காகச் சென்ற சந்தர்ப்பத்தில் சந்தேகத்திற்குரிய முறையில் செயற்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, மஹிந்தவை கொலை செய்வதற்கான திட்டம் தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ தொடர்பில் ஒவ்வொரு வாரமும் அறிக்கை வழங்க வேண்டும் என பொலிஸ் திணைக்களம் ஆலோசனை வழங்கியுள்ளது.

தான் கடமையே செய்வதாகவும் கூறி இந்த நபர் கடமைக்கான அடையாள அட்டையையும், தேசிய அடையாள அட்டையையும் காட்டியுள்ளார் எனவும் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (க)

## இராணுவ மற்றும் கடற்படைத் தளபதிகளுடன் பாதுகாப்புப் படைகளின் பிரதானி அவசர சந்திப்பு!

கொழும்பு, ஓக. 19

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, இராணுவ மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோரை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தனவை கடற்படைத்தலைமையகத்தில் சந்தித்துள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன நியமிக்கப்படவுள்ளனர் என நேற்றுமுன்தினம் இரவு தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், நேற்று முன்தினம் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல்கிரிஷாந்தடிசில்வா, இராணுவ மற்றும் கடற்படைத்தளபதி ஆகியோரையும் சந்தித்துள்ளார். (க)

## புத்தளத்தில் குப்பைகளைக் கொட்டும் தீர்மானத்தை உடன் கைவிடுங்கள்!

### முன்னாள் அமைச்சர் அஸ்வர் தெரிவிப்பு

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை புத்தளம் அறுவைக்காடு பிரதேசத்தில் கொட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனினும், அங்கு குப்பை கொட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை உடன் கைவிடவேண்டும் என அரசிடம் தாம் வேண்டுகோள் விடுக்கிறோம் என முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளையிலுள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்றது.

அதில் கந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தற்போது குப்பை பிரச்சினை நிலவுகிறது. குறித்த பிரதேசத்தில் குப்பை கொட்டும்போது அப்பிரதேச மக்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். எனவே, எதிர்ப்பு கிளம்பும்போது வேறோர் இடத்தில் குப்பை கொட்டுகின்றனர்.

எனவே, இவ்வாறு இடமாற்றுவதன் மூலம் மாத்திரம் குப்பைப் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை. எனவே, மக்களுக்குப் பாதகமில்லாத வகையில் குப்பை முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளைக் கொட்டுவதற்கு அரசு எதிர்பார்த்துள்ள புத்தளம் அறுவைக்காடு பிரதேசம், அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய வகிபாகமுள்ள பகுதியாகும்.

இந்தப் பிரதேசத்தை பொன் பரிப்புபற்று என மக்கள் அழைக்கின்றனர். எனவே, அந்த பொன்பரிப்பு மண்ணை குப்பை பரப்பும் மண்ணாக மாற்றக்கூடாது என அரசிடம் வேண்டிக்கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் சிரேஷ்ட டி.ஐ.ஜி. படியிலிருந்து வீழ்ந்து சாவு!

கொழும்பு, ஓக. 19

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே திடீர் விபத்து காரணமாக கண்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

மாடிப்படியில் இருந்து வீழ்ந்த அவர், கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த நிலையில், நேற்றுக் காலை 5 மணியளவில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு நாள்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தநிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

அவரின்இறுதிக்கிரியைகள் நாளை இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் சிறப்பு படையணியின் முதலாவது கட்டளைத் தளபதியாக போதிலியனகேசெயற்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# அதிகாரிகளின் சொந்தத் தேவைக்கு அரச வாகனங்கள் பயன்படுகின்றன!

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 19

வட மாகாணங்களிலுள்ள திணைக்களங்களில் உயர் பதவிகளை வகித்துவரும் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் தங்களது திணைக்களங்களினால் தமது அலுவலகத் தேவைகளுக்கு வழங்கப்பட்ட வாகனங்களை முறையற்ற விதங்களில் தங்களது சொந்த தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர் என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதிகாரிகள் இவ்வாறு மேற்கொள்ளும் போது இதைப் பார்த்து அவர்களுக்கு கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்களும் அலுவலகத் தேவைகள் எனக் கூறிக்கொண்டு அலுவலக வாகனங்களை அவர்களது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகார சபை ஒன்றின் வடமாகாண பணிப்பாளர் ஒருவர் அவருக்கு அலுவலகத்தால் வழங்கப்பட்ட இரண்டு வாகனங்களில் ஒன்றை அவரது தனிப்பட்ட தேவைக் காகப் பயன்படுத்தி வருகிறார் எனத் தகவல் தெரியவந்துள்ளது.

பிரதம பொறியியலாளர் அவருக்கு வழங்கப்பட்ட ஒரு வாகனத்தை தமது தேவைகளுக்காகவும், தனது தனிப்பட்ட தேவைகளுக்காகவும் பயன்படுத்துகிறார் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிடச் செல்கிறோம் எனக் கூறிக் கொண்டு வெளிமாவட்டங்களுக்குச் சென்று வரும் அதிகாரிகளும், உத்தியோகஸ்தர்களும் இருந்து வருகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பல திணைக் களங்கள், மாவட்ட, பிரதேச செயலகங்களிலும் இவ்வாறாக வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகின்றன என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# தினசரி ராசி பலன் 19.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 03 ஆம் நாள் துவாதசித்திதி காலை 7.17 மணி வரை. அதன்மேல் திரயோதசி பி.இ.4.38 மணி வரை. பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: புனர்பூசம் இரவு 7.09 மணி வரை. பின்னர் பூசம். சித்தயோகம். முழுவதும். ராகுகாலம்: காலை 9.08 மணி முதல் 10.41 மணி வரை. சுபநேரம்: மாலை 3.04 மணி முதல் 4.34 மணி வரை. இன்று பிரதோஷ விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத வளர்பிறை திரயோதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: புனர்பூசம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** விருத்தியான நாள். பணவசதி திருப்தி அளிக்கும். குடும்ப நட்புறவு மேலோங்கும். உழைப்பால் உயர்வடைவார்கள். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

**ரிஷபம் :** சுபீட்சமான நாள். பணபலம், மனபலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி மேம்படும். பூர்வீகசொத்தால் லாபமுண்டாகும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்திவந்து சேரும்.

**மிதுனம்:** யோகமான நாள். பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உடல்நலம் சுறுசுறுப்புடன் இருக்கும். வாகன வசதிகள் பெருகும்.

**கடகம் :** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் தலைதூக்கும். மாணவர்களின் படிப்பில் பின்னடைவு உண்டாகும். தந்தை உறவில் விரிசல் உண்டாகும்.

**சிம்மம்:** நன்மையான நாள். பணம் பலவழிகளாலும் வந்து சேரும். குடும்ப ஒற்றுமை வலுவடையும். புதிய ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வேலை எதிர்பார்த்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

**கன்னி :** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவில் நெருக்கடியும், தட்டுப்பாடும் ஏற்படும். தொழில், வியாபாரம் ஏற்றத்தாழ்வுடன் நடைபெறும். விரயச் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும்.

**துலாம் :** மேன்மையான நாள். பணவரவு திருப்தி அளிக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி உண்டாகும். தொழில், வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும்.

**விருச்சிகம்:** தீமையான நாள். உஷ்ண நலிவுகளால் சிரமங்கள் ஏற்படும். வியாபாரச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் வீண் அலைச்சல், மருத்துவச் செலவுகளால் துன்பப்படுவார்கள்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு குறையும். உடல்நலப் பாதிப்பு கவலையைத் தரும். வீண் விரயச் செலவுகள் உண்டாகும். வழக்குகளில் திடீர்செலவுகள் ஏற்படும்.

**மகரம் :** அனுகூலமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். எடுத்தகாரியங்களில் வெற்றியும், சகோதரர் ஆதரவும், பரஸ்பர உதவியும் நன்மையை உண்டாக்கும்.

**கும்பம்:** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு குதூகலமாய் இருக்கும். புதிய நட்பு, புதிய உறவு இவர்கள் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

**மீனம் :** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோக விடயமாய் வெளியூர்களுக்கு அலைய நேரிடும். சிலர் படித்து விட்டு வேலை தேடி அலைவார்கள்.

**சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால் அனுஷம் கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவரிக்கவும்.**

# கிளிநொச்சியின் ஏ9 வீதியில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்!





கிளிநொச்சியின் ஏ9 வீதியில் இரு புறங்களிலும் உள்ள வடிகான்களும் நேற்று டெங்கு ஒழிப்பு செயல் திட்டத்தின் கீழ் சுத்தம் செய்யப்பட்டன.

வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் டெங்கு நுளம்புகளைக் கட்டுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்தநிலையில், கிளிநொச்சியின் நகர்ப்புறங்களில் டெங்கு ஒழிப்புதிட்டத்திற்காக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்று நடைபெற்ற வடிகான்கள் சுத்தப் படுத்தலில் கிளிநொச்சி மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஒன்பது கோடி ரூபா செலவில் ஊற்றுப்புலம் பாலம் புனரமைப்பு



கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள ஊற்றுப்புலம் ஒடுக்குப் பாலம் 9 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்–

33 மீற்றர்நீளமும், 4.2 மீற்றர் அகலமுடைய இந்த பாலத்தின் கொங் இறீட் பணிகளுக்கு 3 கோடியே 50 லட்சம் ரூபாவும், இரும்பு பாலத்திற்கு 5 கோடியே 50 லட்சம் ரூபாவும் ஒதுக்கப் பட்டுள்ளது.

ஊற்றுப்புலம் ஒடுக்கு பாலம், ஆயிரம் பாலம் திட்டத்திற்கு கீழ் கொண்டுவரப் பட்டதோ, அல்லது தற்போது ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டமோ அல்ல கடந்த சில வருடங்களுக்கு முன் ஐக்கிய இராச்சியத்தின் நிதியுதவியுடன் முன்னைய அரசின் காலத்தில் பாலம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# மழையுடன் காலநிலை மேலும் தீவிரமடையும்; வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

நாட்டின் தென்மேற்கு பாகத்தில் நீடிக்கும் மழையுடன் கூடிய காலநிலை இன்று சற்று தீவிரமடையலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஊவா, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும், மாத்தளை, திருகோணமலை, அம்பாறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் பலமான காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த நிலையில், கடற்கரையோரங்களை சுற்றியுள்ள பகுதிகளிலும் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சப்ரகமுவ, மேற்கு மற்றும் மத்திய மாகாணத்திலும், காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும். வட மேல் மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டை, காலி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டத்தில் ஓரளவு மழை பெய்யும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பகுதியில் குறிப்பாக சப்ரகமுக மாகாணம் மற்றும் களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் சுமார் 75 மில்லி மீற்றர் கன மழை பெய்யக்கூடும்.


வடக்கின் கடற்கரையோரங் களின் பல பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# ரஜினி – கமல்

# தாங்குமா தமிழகம்?

உலகம்முழுவதும்உள்ள தமிழர்களுக்கு இப்போது இறங்குகாலம் போல் தெரிகிறது.

ஈழத்துத் தமிழர்களுக்கு மட்டும் தான் இடர் என்றில்லை தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும் அதே கதிதான்.



இங்கு நாம் எதிரிகளால் இடருறுகிறோம். அங்கோ அவர்களே அவர்களுக்கு இடர் விளைவித்துக் கொள்கிறார்கள்.

காலத்தின் கோலமன்றி வேறென்ன?

பெரும்புரட்சி செய்து ஆட்சிக்கு வந்த திராவிட இயக்கங்கள், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என ஆளுமைத் தலைவர்களை முன்னிறுத்தி கடகடவென உச்சந்தொட்டன.

இன்று பழனிச்சாமி, பன்னீர்செல்வம், சசிகலா, தினகரன் என ஆளுமை அற்ற தலைவர்களால், வளர்ந்த அதே வேகத்தில் இறங்கத் தொடங்கியிருக்கின்றன.

தனது ஆணவப் போக்கால் பலரது வெறுப்பைச் சம்பாதித்தாலும், ஆளுமை பெற்று அசையாமல் நின்ற ஜெயலலிதாவின் மறைவோடு, தமிழ்நாட்டில் பெரும் அரசியல் குழப்பம் வெடித்திருக்கிறது.

ஜெயலலிதாவைப் போலவே நடை, உடை, பாவனை காட்டி முதலமைச்சர் ஆகலாம் என நினைத்த சசிகலா,இன்றைக்கு சிறைச்சாலைக்குள்.

காலில் விழுவதே கடைத்தேற வழி என்றிருந்த ஓ.பி.எஸ். திடீரென ஜெயலலிதா சமாதியில் ஞானம் பெற்று, சசிகலாவுக்கு எதிராகப் புரட்சி கிளப்ப அவர் வகித்த பதவி பழனிச்சாமிக்குப் பரிசாகக் கிடைத்தது.

இன்று பழனிச்சாமியும் சசிகலா குழுவினருக்கு எதிரான புரட்சியாளர்கள் வரிசையில்.

ஆளுங்கட்சி மூன்றணியாகப் பிரிந்து கிடக்கிறது.

தேர்தல் சின்னத்திற்காக அவற்றில் இரண்டு அணிகள் ஒன்று சேர முனைந்து கொண்டிருக்கின்றன.

இங்ஙனமாய்க் குழம்பிய தமிழ்நாட்டு அரசியல் குட்டையுள் மீன் பிடிப்பதற்காய்,மீண்டும் சினிமாத் துறையிலிருந்து புதிய வரவுகள் முனையத் தொடங்கியுள்ளன.

சினிமாத் துறையினரை மீறி தமிழ்நாட்டு அரசியலுக்குள் இனி எவரும் வரமுடியாது போல் தெரிகிறது.

சட்டத்துறையினரை நம்பி கெட்டது ஈழத்து அரசியல்.

சினிமாத்துறையினரை நம்பி கெட்டது தமிழ்நாட்டு அரசியல்.

‘தாமரை’ வரவேற்க தாவி வரத்தயாராகிறார் நடிகர் ரஜினிகாந்த்.

கமலிடமும் திடீரென தர்ம ஆவேசம். ஆவேசத்தின் நோக்கம் அரசியல் பிரவேசம்.

ஜெயலலிதா காலத்தில் அஞ்சி ஒடுங்கி ஊரை விட்டே ஓடப்போகிறேன் என்றுரைத்த கமல், இன்று தர்மம் பேசி அரசுக்கு அடிக்கடி சவால் விடுகிறார்.

‘பூனை மெலிந்தால் எலி சுகம் கேட்குமாம்’ என்ற கதைதான்.

ரஜினிக்கூடாக தமிழ்நாட்டில் தாவிப்படர விளைகிறது ‘தாமரை’க் கொடி.

அரசியலில் பிரவேசிக்க ஆண்டவனின் அனுமதிக்காய்க் காத்திருக்கிறார் ரஜினிகாந்த்.

இவர் என்ன செய்யப்போகிறார்? என்று ஆண்டவனே பதிலறியக் காத்திருப்பார் போல.

பிற மாநிலக்காரன் தமிழ்நாட்டை ஆளுவதா? எனச் சீறிப்பாயும் சீமான் போன்றவர்களைப் புறந்தள்ளி, ரஜினியின் அரசியல் பயணம் விரைவில் தொடங்கப்போவதாய் அறிக்கைகள்



கம்பவாரிதி
**இ.ஜெயராஜ்**

வந்தபடி இருக்கின்றன.

கமலோ நான் அரசியலுள் எப்போதோ பிரவேசித்துவிட்டேன் என்கிறார்.

இவ்விருவர்தம் அச்சுறுத்தலாலும், ஆளுங்கட்சி மட்டுமன்றி எதிர்க்கட்சிகளும் சற்று அசைந்துதான் போயிருக்கின்றன.

தமிழ்நாட்டின் தலைவிதி என்னவாகப்போகிறதோ?

அரசியலுக்கு நடிகர்கள்தான் வரவேண்டும் என்ற முடிவிலிருந்து தமிழர்கள் என்றுதான் மாறப்போகிறார்களோ?

அது அவர்கள் விருப்பு. அரசியலில் நுழைய முற்படும் ரஜினி, கமல் எனும் இருவரில் அங்கீகரிக்கப்படத் தக்கவர் யார்?

ஆராயவேண்டிய விடயம் அது வாகத்தான் இருக்கிறது.

நிதானம், மக்கள் நேசிப்பு, இறை நம்பிக்கை, சத்திய நோக்கு, அங்கீகரிக்கப்பட்ட குடும்ப வாழ்வு, செல்வப் பின்னணி என்பவை ரஜினியின் பலங்கள். மத்தியில் ஆட்சியில் இருக்கும் ‘தாமரை’யின் ஆதரவு அவரது தனிப்பலம்.மாற்று மாநிலத்தவர் என்கின்ற ஒன்றே ஒன்றுதான் அவரது பலவீனம்.

கமலைப் பொறுத்தவரை மேற்கூறிய தகுதிகளில் அவர் மிகவும் பின் நிற்கிறார்.

தனது இளமையை காலம் வேகமாய்க் கரைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்து, இனி சினிமா எத்தனை தூரம் கைகொடுக்குமோ எனும் ஐயத்தில் தன்னை நிலைநிறுத்த அரசியலில் நுழைய ஆர்வமாய் முயல்கிறார் அவர். தமிழ்நாட்டில் வேரோட்டமாய் விரிந்து கிடக்கும் ஆத்மீகத்தில் உடன்பாடின்மை.

தமிழ்நாட்டில் காலாகாலமாய் தொடர்ந்து வரும் குடும்ப அமைப்பில் நம்பிக்கை யின்மை, தான் புதிதாய் வகுத்துக் கொண்ட தனி வாழ்விலும் பலதரமாய்ப் படுதோல்வி. ரஜினி அளவிலான மக்கள் ஆதரவின்மை. அரசியல் பின்னணி இன்மை என்பவை கமலினது பலவீனங்கள்.

தனி வாழ்வில் அவரது தோல்வி பகிரங்கமானது. தனிவாழ்வை நாம் ஏன் ஆராய வேண்டும்? என சிலர் கேட்கலாம்.தனி வாழ்வில் வெற்றி பெற முடியாதவர் பொதுவாழ்வில் வெற்றி பெறுதல் எங்ஙனம்?

திராவிட மரபில் ஊறிய தமிழ்நாட்டு அரசியலில், அவரது பிராமணர் என்ற ‘வர்ண’ அடையாளம், நிச்சயம்



அவரை மேலெழும்ப விடப்போவதில்லை.

மேற்கூறியவை கமலினது ‘மைனஸ் பொயின்டுகள்’.

இங்ஙனமாய் சீர் தூக்க, அரசியல் அரங்கில் கமலைவிடப் பல படிகள் மேலே நிற்கிறார் ரஜினி. ஆனால் முடிவெடுக்க முடியாத ஆளுமைக் குறைவும், நோயால் நிகழ்ந்திருக்கும் உடல் பலவீனமும் ஒன்றுசேர்ந்த ரஜினி அரசியலுக்கு வந்தாலும் , அவ்வருகை திராவிடர் கழகங்களிடமிருந்து தமிழ்நாட்டு அரசியலைப் பறித்து, ‘தாமரை’க் கட்சிக்கு அதனை தானம் செய்யமட்டுமே பயன்படும் போல் தெரிகிறது.

இது தமிழ்நாட்டுக்கு நலன்தரப் போகிறதா தீங்கிழைக்கப் போகிறதா என்பதைக் காலம்தான் முடிவு செய்ய வேண்டும்.

அரை நூற்றாண்டுக்கு மேலான திராவிட கழகங்களின் ஆட்சிகள், ஏராளமாய்த் தவறுகளை இழைத்திருந்த போதும், தமிழ்நாட்டின் தனித்துவத்தை ஏதோ வகையில் இதுவரை காத்துவந்துள்ளன.

தேசிய நீரோட்டத்தில் இணையும் புதிய பாதைதிறந்தால் அத்தனித்துவம் நிலைக்குமா?

அன்றேல் இன்றைவிட தமிழ்நாடு செழிக்குமா?

விடைக்காய்க் காத்திருக்கிறது வரலாறு. ★

> பெரும்புரட்சி செய்து ஆட்சிக்கு வந்த திராவிட இயக்கங்கள், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என ஆளுமைத் தலைவர்களை முன்னிறுத்தி கடகடவென உச்சந்தொட்டன. இன்று பழனிச் சாமி, பன்னீர்செல்வம், சசிகலா, தினகரன் என ஆளுமை அற்ற தலைவர்களால், வளர்ந்த அதே வேகத்தில் இறங்கத் தொடங்கியிருக்கின்றன.

காலைக்கதிர்
Kalaikkathir



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




பெருகிவரும் போர் அபாயத்துக்கான ஒரு கூடுதல் சமிக்ஞையாக, இந்திய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்த ஒரு நேர்காணலில், இந்தியாவில் பிறந்த பொருளாதார வல்லுநரும், பிரிட்டிஷ் தொழிலாளருமான பீர் மேக்னாத் தேசாய், அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியாவுக்கு ஆதரவாக வரும் என்று அவரது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்துகின்ற போதும், உடனடியாக நேரவிருக்கும் சீன-இந்தியப் போர் குறித்து எச்சரித்தார்.

''இந்த முறை நாம் மிக விரைவில் சீனாவுடனான ஒரு முழு அளவிலான யுத்தத்தில் நிலைப்போம் என்பது மிகவும் சாத்தியமானது என்றே நான் நினைக்கிறேன்'' என்று தேசாய் India Asia News Agency (IANS) க்கு தெரிவித்தார்.

சீனாவுக்கு எதிரான அமெரிக்கத் தாக்குதலில் இந்தியாவின் தோற்றம் ஒரு ''முன்னணி நிலை'' வகிப்பதாக கூறப்படுவதை வேண்டுமென்றே புறக்கணிக்கின்ற அதே வேளையில், தேசாய் இமயமலை மற்றும் தென் சீனக் கடல் இரண்டு விவகாரங்களிலும் சீனாவை ஒரு ஆக்கிரமிப்பாளராக சித்திரிக்க முயன்றார்.


இந்திய அரசு மற்றும் ஆளும் வர்க்க வட்டாரங்களுடன் நீண்ட காலம் சுற்றி வந்துகொண்டிருக்கும் தேசாய், ஒரு போர் டோக்லாம் பீட பூமிக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல, ஆனால், அதற்கு பதிலாக வட இமயமலை முழுவதும், எல்லா இடங்களில் இருந்தும் தொடங்கும் என்று தெரிவித்தார். அத்தகையதொரு போரைக் கட்டுப்படுத்த இயலாது என்று அவர் எச்சரித்தார். ஆனால், அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுடனான இந்தியாவின் பாதுகாப்பு ஒத்துழைப்பு பயனுள்ளதாக இருக்கும் என்று கூறினார்.

மேலும், அவர் ''அமெரிக்காவின் உதவியும், ஆதரவும் இல்லாமல் இந்தியாவால் சீனாவை எதிர்த்து நிற்க முடியாது. அதேபோல, இந்தியாவின் உதவியின்றி சீனாவை எதிர்த்து அமெரிக்காவால் நிற்க முடியாது. இந்த உறவில் உள்ள ஒத்ததன்மை அதுதான் என்று தொடர்ந்து கூறினார்.

ஜூன் 18 அன்று, வெள்ளை மாளிகையில் மோடி, ட்ரம்பைச் சந்தித்த அதேநாளில்தான் டோக்லாமிற்காக இந்தியத் துருப்புக்கள் தலையீடு செய்ததுடன், சீன கட்டுமானத் தொழிலாளர்களை அவர்களது சாலை கட்டமைப்பை நிறுத்துமாறு கட்டாயப்படுத்தியது.

அந்தக் கூட்டத்தின் முடிவில் அவர்கள் இந்திய-அமெரிக்கப் ''பூகோள மூலோபாய பங்காண்மை'' ஐ மேலும் விரிவுபடுத்த உறுதியளித்தனர்.

தேசாயின் கருத்துக்கள் அடிக்கோடிட்டுக் காட்டுவது போல, ஒரு சிறிய எல்லைப் போராகத் தொடங்கும் ஒரு போர் கூட விரைவாக அதிகரித்து அமெரிக்கா மற்றும் பிற சக்திகளையும் விரைவாக போருக்குள் இழுக்கலாம். உண்மையில், பிஜேபி அரசாங்கமும், இந்திய உயரடுக்கினரும் அமெரிக்க ஆதரவைப் பெறுவதில் முனைவுடன் இருப்பதோடு, ஆணுஆயுத சக்திகளிடையேயான ஒரு பூகோள மோதலை விரைவில் அதிகரிக்கச் செய்யும் ஒரு மோதலுக்கான வாய்ப்பையும் உயர்த்துகின்றனர்.




அத்தகையதொரு பேரழிவு தவிர்க்கப்பட்டாலும், மேலும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான ஒரு போர் ஓர் எல்லைப் போராக மட்டுப்படுத்தப்பட்டாலும் கூட, உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்களுக்கு இது பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும்.

அத்தகைய போர், அதன் விளைவு என்னவாக இருந்தாலும், ஏகாதிபத்தியத்தை மட்டுமே வலுப்படுத்தும்.




ஒரு சீன வெற்றி என்பது, சீனாவுக்கு எதிரான அமெரிக்க தலைமையிலான நேட்டோ வகை கூட்டணியில் இந்திய முதலாளித்துவம் அதன் இடத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒரு காரணமாக மட்டுமே அமையும். மேலும், மறு ஆயுதமயமாக்கம் மற்றும் போர் குறித்த அவர்களது திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்கான ஒரு சாக்குப்போக்காக ஜேர்மனி, ஜப்பான் மற்றும் பிற ஏகாதிபத்திய சக்திகள் இமயமலை நிகழ்வுகளைப் பயன்படுத்தும்.




இந்த நிகழ்வில் சீனா தோல்வியுற்று பாதிப்படைந்தால், அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனாவுக்கு எதிரான அதன் பொறுப்பற்ற இராணுவ-மூலோபாயத் தாக்குதலைத் தீவிரப்படுத்தும் வாய்ப்பைப் பற்றிக்கொள்ளும். இதற்கிடையில், மோடி அரசாங்கம், 1962 இன் 'அவமானத்தை' மாற்றுவதில் இருந்து, இந்தியாவின் அண்டை நாடுகளை மிரட்டி தெற்கு ஆசியாவின் மேலாதிக்க சக்தியாக தன்னை அங்கீகரிப்பதற்கான அதன் முயற்சிகளை முடுக்கிவிடும், மேலும் தொழிலாள வர்க்கத்தின் மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தும் வகையில் போர்வெறி தேசியவாத உணர்வு சூழலை தூண்டிவிட்டு, இந்திய அரசியலை மேலும் வலது பக்கமாக மோசமடையச் செய்யும்.

## வட கொரியாவுக்கு எதிராக ட்ரம்பின் அணுஆயுத போர் அச்சுறுத்தல்.

வட கொரியா போன்றவொரு வறிய மற்றும் ஒடுக்கப்பட்ட நாட்டுக்கு எதிராக ''உலகம் முன்னொருபோதும் கண்டிராத விதத்தில் ஆத்திரம் மற்றும் கோபத்தைக்'' கட்டவிழ்த்துவிட, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அச்சுறுத்தலானது, உலகெங்கிலும் பயங்கர மற்றும் பயம் கலந்த அதிர்ச்சியலைகளை ஏற்படுத்தி உள்ளது.

அண்மித்து ஒரு கால் மில்லியன் ஜப்பானிய ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்ட அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலின் 72 ஆம் நினைவாண்டை, ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் உயிர் பிழைத்தவர்கள் நினைவுகூர்ந்த அதே வாரத்தில் தான், அமெரிக்க ஜனாதிபதி அவரது கோல்ஃப் விடுமுறைக்கு இடையே ஒட்டுமொத்த மனித இனத்துக்கும் கணக்கிடவியலா விளைவுகளுடன் கூடிய ஓர் அணுஆயுத போருக்கு அச்சுறுத்தல் விடுத்தார்.

ஜனாதிபதியின் கருத்து ''திட்டமிட்டதல்ல, தன்னியல்பாக'' கூறப்பட்டதென ஊடகங்களுக்குத் தெரிவித்து, வெள்ளை மாளிகையின் மூத்த உதவியாளர் ஒருவர் ட்ரம்ப் அறிக்கையின் உறைய வைக்கும் விளைவுகளைக் குறைத்துக் காட்ட முயன்றார். அதே வேளையில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் றெக்ஸ் ரில்லர்சன் கூறுகையில், அமெரிக்கர்கள் கடந்த சில நாள்களின் இந்த குறிப்பிட்ட கடும் பேச்சுக்கள் குறித்துக் கவலையின்றி, இரவில் நிம்மதியாக உறங்கலாம் என்று தெரிவித்தார்.

சமாதானப்படுத்தும் மறுஉத்தர வாதங்கள் என்பதற்கும் குறைவான இதுபோன்ற கருத்துக்கள் கூறப்பட்டாலும், ட்ரம்பின் பாதுகாப்புத்துறை செயலரும் முன்னாள் கடற்படைத் தளபதியும், நிதானமான சக்தியைச் சேர்ந்த ''அறிவார்ந்த முடிவுகளை எடுக்கும் அனுபவஸ்தர்'' என்று வழமையாக ஊட கங்களால் குறிப்பிடப்படுபவருமான ''போர் வெறியர்'' ஜேம்ஸ் மாட்டீஸ், ஜனாதிபதியின் அச்சுறுத்தலையே எதிரொலித்தார்.

வட கொரியா ''அதன் ஆட்சி முடிவடைவதற்கும் மற்றும் அதன் மக்கள் அழிக்கப்படுவதற்கும் இட்டுச் செல்லும் எந்தவொரு நடவடிக்கைகளையும் பரிசீலிப்பதை நிறுத்திக்'' கொள்ள வேண்டுமென அவர் புதனன்று கோரினார். வொஷிங்டனின் கோரிக்கைகளுக்கு அடிபணியுங்கள் அல்லது அணுஆயுத நிர்மூலமாக்கலை முகங்கொடுங்கள் என்பதே இதன் தவறுக்கிடமற்ற அர்த்தமாகும்.

ட்ரம்ப் அவரே கூட அண்மையில் ஒரு அணுஆயுத போர் நடத்துவதற்கான வொஷிங்டன் தகைமையை பெருமைப் பீற்றும் ஒரு ட்வீட் மூலமாக அவரது முந்தைய அச்சுறுத்தலைப் பின் தொடர்ந்தார்.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

அத்தியாயம் - V

## யாழ்ப்பாண சொத்துடைமை முறை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.


அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

69




வீட்டு வளவினுள் காணியில் ஒரு சிறிய பகுதி துப்புரவாக்கப்பட்டு, அங்கு மிளகாயும் வெங்காயமும் நடப்பட்டிருந்தன. கத்தரி பூக்கத் தயாராக இருந்தது. இதன் காய்கள் நாளாந்தம் வீட்டுக் கறியாக இருக்கும். வீட்டுத் தேவைக்கு மிஞ்சிய கத்தரிக்காய் உள்ளூர்ச் சந்தையில் விற்பனையாகி, வீட்டுக்குச் சிறு வருமானம் தரும். கிணற்றைச் சுற்றி கத்தையாக வாழை மரங்கள். கிணற்றைச் சுற்றியுள்ள அழுக்கு நீர் வடிகால் இடப்பட்டு வாழைக்குப் போகும். வாழை செழிக்க அந்த நீர் போதும். உணவின் மேல் வாழைப் பழம் உண்பர். பிட்டு, காலை உணவாக அல்லது இரவு உணவாக அமையும். மீதமாகும் வாழைக் குலைகளும் சந்தைக்குப் போகும். வாழைப் பொத்தி எனப்படும் வாழைப் பூ ஒரு சிறப்பான மரக்கறியாகத் தயாரிக்கப்படும். வாழைக் குலையை வெட்டியவுடன், மரம் நிலமட்டத்துக்கு வெட்டப்பட்டு தண்டு மாட்டுக்கு உணவாகிறது. வெட்டிய இடத்தில் உள்ள வாழைக் கிழங்கில் இருந்து புதிய மரம் வளரும். வீட்டில் வளரும் கோழி, முட்டை தரும். கறியாகவும் மாறும். ஆடும் மாடும் பால் தரும். மரங்களுக்கு பசளையும் தரும்.

இந்த அசையும் சொத்துக்களும் அசையாச் சொத்துக்களும் இருந்த போதிலும் குடும்பத்தின் முக்கிய தேவையான பணம் தட்டுப்பாடாகவே இருந்தது. ஆகவேதான் பிள்ளைகளின் தந்தை வீட்டில் இல்லை. தாயே வீட்டுத் தலைமையைப் பொறுப்பேற்றிருந்தார். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். ஒரு சின்னப் பையன். ஒரு பதினான்கு வயது பையன். ஒரு பதின்மூன்று வயது குமர்ப் பெண். எதிர்காலத்தில் பல காரணங்களுக்காக இவர்களுடைய தந்தை பணம் சம்பாதித்தாக வேண்டும். அவர்களுடைய முதற்கவலை, பிள்ளைகளின் உயர்கல்வியே. யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்துக்கு அல்லது வேறேதாவது சிறிலங்கா பல்கலைக்கழகத்துக்குத் தேவையான நுழைவுப் புள்ளிகள் பிள்ளைகளுக்குக் கிடைத்துவிட்டால் அவர்களுடைய எதிர்காலக் கல்வி பிரச்சினையாக இருக்காது. ஆனால், பல்கலைக் கழக அனுமதி பெறுவதற்குச் சிங்களவரைக் காட்டிலும் தமிழர்கள் கூடுதலான தேர்வுப் புள்ளிகள் பெறவேண்டும் என்பதால் போட்டி கடுமையாக இருக்கும். பல்கலைக்கழகத்தில் இடம்பிடிக்க ஆயிரமாயிரம் பேர் போட்டி போடுவார்கள். சிலருக்கே அனுமதி கிடைக்கும். மகனார் கெட்டிக்காரனாக இருக்கலாம். ஆனால் பல்கலைக்கழக இடம்பெறுவதற்குத் தேவையான உயர்ந்த தேர்வுப் புள்ளிகள் பெறக்கூடிய அதீத திறமை இல்லாவிட்டால், உடனே அவரை வெளிநாட்டுக்கு, வெளிநாட்டுக் கல்விக்காக அனுப்பப் பெற்றோர் முனைவர். அந்த மகன், தமது தொழில் கல்வித் தகைமைகளைப் பெற்றுவிட்டால், உழைத்துச் சம்பாதித்து தமது தம்பியாரின் கல்வியையும் தங்கையின் சீதனத்தையும் பொறுப்பு ஏற்கலாம். மகளுடைய சீதனமே, பெற்றோருடைய இரண்டாவது கவலையாக இருக்கும். தான் படித்து, ஒரு தொழில் பார்க்கவேண்டும் என்று பிள்ளை விரும்பலாம். ஆனால் தன் மகளுக்கு ஒரு நல்ல கல்யாணம் பேசி, ஏற்பாடு செய்வதே தமது மிகப் பெரும் கடமை என்றே யாழ்ப்பாண பெற்றோர் கருதுவர். அது பலிதமாவதற்கு, குடும்பத்துக்கு நிறையப் பணம் வேண்டும். பரம்பரைச் சொத்து மகளுக்கே செல்லும் என்ற உத்தரவாதம் இருந்தாலும், கொழுத்த சீதனம் எதிர்பார்க்கும் யாழ்ப்பாணத்தாருக்கு அது போதாமல் இருக்கும். சீதனத்துக்கு மேலே பண ரொக்கமும் எதிர்பார்ப்பார்கள். ஆகவே, பெற்றோரின் கடப்பாடுகளும் சமூக உயர் வேணவாக்களும் நிறைவேற்றப்பட வேண்டுமானால், குடும்பத் தலைவர் தொழில் வாய்ப்புத் தேடி வெளிநாடு செல்வது அவசியமாகிறது. விதவை நிலை, திருமண முறிவு, கணவன் காணாமல் போதல், வெளிநாட்டில் கணவன் போன்ற வெவ்வேறு சமூக காரணங்களால் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழ்ச் சமுதாயத்தினிடையே குடும்பத்தின் தலைவராக பெண் அமைவது ஒரு பொதுவான நடைமுறையாகி விட்டது. குறிப்பிட்ட இந்தக் குடும்பத்தில், மூதாட்டியார் நீண்டகால விதவையாவார். மிகக் கொடுமையான நாட்டு நிலையில், ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து, தங்கள் குடும்பத்தையும் காணி பூமிகளையும் மனஉறுதியுடனான இந்த இரண்டு பெண்களும் நிர்வகிக்கும் நிலையை இங்கே காண முடிந்தது.

மூதாட்டியின் வீட்டில் தங்கியிருக்கவே எமது சிறிய குழு சென்றது. இரண்டு பெண்களுக்குமே பெரிய பொறுப்புகள். ஆனாலும், இரண்டு பேருமே விருந்தோம்பலில் உயர்ந்து நின்றார்கள். எமக்காக உணவு சமைத்தார்கள். தங்கள் உணவை எம்முடம் பகிர்ந்துகொண்டார்கள். பிள்ளைகள் குறிப்பாக மூத்த பையன், கிரமமாக எம்மைப் பார்க்க வருவார். ஒரு சுமுகச் சூழலை இங்கே காண முடிந்தாலும், இந்த வீடு எமக்குத் துரதிஷ்ட வசமாகவே அமைந்தது. பல தடவை இராணுவ சுற்றிவளைப்புகள் நடந்தன. மறுநாள் அதிகாலை சுற்றிவளைப்பு நடக்கப்போவதாக எமக்கு ஒரு தடவை முன் கூட்டியே தகவல் கிடைத்தது. ஊர் நன்றாக அடங்கிய பின்னிரவிலேயே தகவல் கிடைத்த போதிலும் உடனடியாக நாம் இடம் மாற வேண்டியிருந்தது. நிலாவெளியில் வயல் வரப்பு வழியாக எமது குழு ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு நகர்ந்தது. ஒழுங்கைகளில் உள்ள வளைவு நெளிவுகளில் போராளிகள் சைக்கிளின் முன் தண்டிருக்கையில் எம்மை ஏற்றிக்கொண்டு அடுத்த தரிப்பிடம் நோக்கிச் சென்றார்கள். நேரம் போகப் போக மன அங்கலாய்ப்பு அதிகரித்தது. மரணமே நேர்ந்தாலும் ஒருவரில் இருந்து ஒருவர் பிரிக்கப்படக்கூடாது என்பதில் பாலாவும் நானும் உறுதியாக இருந்தோம். எம்மிடையே ஒருவரில் இருந்து ஒருவர் பிரிக்கப்படலாம் அல்லது பிடிபடலாம் அல்லது கொல்லப்படலாம் என்ற அச்சமே, முன்னைக்காட்டிலும் எப்போதுமே எம்மை ஒட்டியபடி வைத்திருந்தது. எனவே கடும் அபாயம் வருகிறது என்று தோன்றும் போதெல்லாம் ஒருவரை ஒருவர் காப்பற்றுவதற்காக அருகிலேயே இருக்கவேண்டும் என்ற உணர்வையும் தந்தது. எம் இருவரையும் பிரித்து வைப்பதால் உயிர் தப்புவதற்கான வாய்ப்பு அதிகம் என்ற கருத்து எப்போதாவது தெரிவிக்கப்பட்ட மறுகணமே நாம் அதை ஒரேயடியாக நிராகரித்து விடுவதால் அந்தப் பேச்சு எடுபடுவதே முற்றாக நின்றுவிட்டது. கரவெட்டியில் உள்ள கத்தோலிக்க கன்னியர் மடம் ஒன்றில் கன்னியர்போல நாம் வேடமிட்டிருக்கலாம் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அதை நான் எடுத்த எடுப்பிலேயே நிராகரித்து விட்டேன்.

இரவு வேளைகளில் அடிக்கடி நானே பாலாவின் விழிகளாகவும் இருக்க வேண்டியதாகிற்று. ஒழுங்கைகளுடாகவும் செல்லும் தருணங்களில் நானே அவருடைய விழியானேன். இரவில் பாலாவுக்கு பார்வை மங்கல். அடிக்கடி எனது தோளை அணைத்தபடி வர, ஒழுங்கையில் கூட்டிச் செல்வேன். அதே சமயம், அந்தக் குழுவில் நான் ஒருத்தியே பெண். ஆகவே, திருமணம் மூலம் கிடைத்த நெருங்கிய உறவு பெரும் பயன்தந்தது, எனது கண்ணியத்தையும் தனித்துவத்தையும் பேண பாலா உதவினார். சின்னச்சின்ன விடயங்களே எனக்கு முக்கியமாக இருந்தன. கழிப்பிட வசதிகளில் எனக்கு முன்னுரிமை வழங்கப்படவும், எனக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் வசதி ஏற்படுத்தக் கூடியதாகவும் பாலா பார்த்துக் கொண்டார். கழிப்பிடத்துக்கு உள்ளே இருப்பவரிடம் அன்றிக்கு கழிப்பிடம் தேவை என்று பாலா கத்துகின்றமை அவ்வப்போது நடக்கும். நான் குளிக்கும்போதும் அது நடக்கும். யாழ்ப்பாண வீடுகளில் பெரும்பாலானவற்றில், குறிப்பாக பழைய வீடுகளில் குளியலறை வீட்டினுள் இருப்பதில்லை. வீட்டின் பின்புறம் உள்ள கிணற்றிலேயே மக்கள் கழுவுவது வழக்கம். கிணற்றில் இருந்து நீரை அள்ளி, வாளியால் குளிர்நீரை மேலில் ஊற்றிக் கொண்டிருக்கும்போது, மேலில் மெல்லிய காற்று தடவிச் செல்லும்போது அந்த இயற்கை நிலை தரும் சுகானுபவம், அது அனுபவித்தவர்களுக்கே புரியும். இளைஞர்கள் கிணற்றடியில் தங்கள் சாறத்தில் அல்லது உள்ளாடையுடன் கூடி நின்று யார் தம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற பிரக்ஞையே இல்லாமல் ஆறுதலாக குளித்துக் கொண்டிருப்பார்கள். பெண்கள் சாறத்தை தங்கள் மார்புக்கு மேலே குறுக்குக் கட்டாகக் கட்டியபடி குளிப்பார்கள். ஆனாலும் குளியல் என்பது ஆண்களைப் பொறுத்த வரையில் ஆரவாரமாகவே இருக்கும். இப்படியான கழுவும் முறையை நான் கடைப்பிடிக்கவும் இல்லை. அது எனக்கு பிடிபடவும் இல்லை. இயற்கையாக நின்று வாளிகளில் நிரப்பிய நீரில், மூடிய குளியலறைக்குள் நின்று கழுவுவதே எனக்கு பழக்கப்பட்ட ஒன்று. அநேகமாக இருட்டும் வரை குளிப்பதற்காக நான் காத்திருப்பதுண்டு. எல்லோரையும் பாலா விரட்டிவிட்டு, இடத்தை வெளியாக்கி, நான் தனிமையில் குளிப்பதற்கு வசதி ஏற்படுத்துவார். அதன் பின் கிணற்றில் இருந்து நீர் இறைத்து என் மேல் ஊற்றுவார். அப்படியான தருணங்களில் எமது நிலைபற்றியும் எமது வாழ்க்கை பற்றியும் கூடிப் பேசுவோம். குளிக்கும் வேளைகளிலேயே காப்பு உணர்வும் அதிகமாக இருக்கும். அந்த நேரத்தில் இராணுவச் சுற்றி வளைப்பு இருக்கிறதா என்பதை பாலா கவனமாகப் பார்க்கவேண்டியிருக்கும். நான் இயற்கையாக நின்று குளித்துக்கொண்டிருக்கும்போது அல்லது கழிப்பறையில் இருக்கும்போது இராணுவசுற்றிவளைப்பு நடக்கக் கூடுமோ என்ற அச்சம் எப்போதுமே எனக்குள் இருந்தது. இதனால், எமது குளியலை ஆறுதலாக நடத்தாது அவசர அவசரமாகச் செய்து முடிக்கும் நிர்ப்பந்தமே பெரும்பாலும் நிலவியது.

(தொடரும்...)

# நல்லூர் கந்தனின் உற்சவ காலத்தில் பக்தி மணம் கமழும் நிகழ்வுகள்

இ.குமாரசாமி சர்மா
ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர்
வண்ணார்பண்ணை.



நல்லூர் சூழல் பக்தி மணம் கமழும் காட்சிகள் மிகவும் அழகுடன் புனிதம் மிகுந்த புண்ணிய நகரமாக காணப் படுகின்றது. நல்லூர் உற்சவ காலம் மிக புனிதமாக அடியார்கள் வழிபாடு செய்ய அமைந்துள்ளது.

முருகன் திருவீதி வலம் வரும் போது வீதிகள் சிவப்பு வெள்ளை கோடுகள் அமைந்த துணியால் விளம் பரங்கள் யாவும் மறைக்கப்பட்டு வெகு அழகாகக் காணப்படுகின்றன.

வீதிகள் மாநகர சபை சுகாதாரப் பகுதியினரால் நீர் தெளிக்கப்பட்டு சுகாதாரமாக – சுத்தமானதாக – குளிர் மையானதாக – அமைந்துள்ளது.

அங்கப்பிரதட்சணம் செய்யும் அடியார்களுக்கு மிகவும் உகந்ததாக உள்ளது. முருகன் திருவீதி உலா வலம் வரும் காட்சி பக்தர்களின் பக்திப் பிரவாகம். அடியார்கள் அனை வரும் அமைதியாக வர நாதஸ்வர கானம் இனிமையாக ஒலிக்க, அதனை மெய்ம் மறந்து யாவரும் கேட்டு அனு பவிப்பதும் திக்குகளில் திருப்புகழ், தேவாரங்கள் ஓதுவார்கள் பாடுவனவும் சுவாமியின் பின்னால் பஜனைகள் இளம் பக்தர்கள் ஒரு புறமாகவும் அதன் பின்னர் வயது முதிர்ந்தவர்கள் தாளங்களுடன் பஜனை செய்வதும் இறுதியில் சின்மயா மிஷன் சார்பில் பச்சிளம் பாலகர்கள் அழகுடன் பஜ னைகள் செய்வதும் நாம் காணும் கண்கொள்ளாக் காட்சிகள்.

இந்த நிகழ்வுகள் யாவற்றையும் ‘டான்’ தொலைக்காட்சி தினமும் தமது ‘ஓம்’ அலைவரிசையில் நேரடி யாகக் காண்பிப்பது அடியார்கள், மக் கள் தமது வீடுகளில் இருந்தவாறே காண முடிகின்றமை மிகச் சிறப்பா னவை. நல்லூர் வீதிகள் நாற்புறமும் உற்சவம் முடிந்த பின்னர் மண்டபங் களில் கலை நிகழ்வுகளைக் காணும் சிறப்பும் அருமையானவை.

மஞ்சத் திருவிழா மிகவும் அலங் காரமாகக் காட்சி தர, பக்தர்கள் பல் லாயிரம் சூழ்ந்து, வர ஈழ நல்லூர் பி.ரஜீந்திரன் கோஷ்டியினரின் இனிய நாதஸ்வர இசையால் முருகன் மஞ் சத்தில் கொலு வீற்றிருந்து மெல்ல மெல்ல மின் ஒளியில் திருவீதி உலா வந்த காட்சிகள் மிகவும் அற்புதம் வாய்ந்தன.

நல்லூர் முருகன் உற்சவ காலத்தில் இளங்கலைஞர் மன்றம் வருடந் தோறும் தவறாது நடத்தி வருகின்ற

**நாளாந்தம் முருகனின் திருவீதி உலா கண்கொள்ளாக் காட்சி**

தெய்வீக இசையரங்கு விழா, துர்க்கா தேவி மணி மண்டபத்திலும் சிறு வர்களுக்கான இசை நடன நிகழ்வு கள் நல்லை ஆதீன மண்டபத்தில் இருந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கந்தபுராண எழுச்சி விழாவும் இசை நிகழ்வுகளும் நல்லூர் சூழல் யாவும் தெய்வீக மணம் கமழும் அரும் காட்சிகளாக அருள் பாலித்து வருகின்றன.

மிகவும் பாராட்ட வேண்டியன.


நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கில் முதல் நாள் நிகழ்வாக தமிழ்நாடு ரி.எம்.பாலாஜி, எஸ்.ஹரி கரன், பாலமுருகன் சாரங்கன் ஆகி யோரின் நாதஸ்வர கான இசையுடன் இனிமையான நிகழ்வாக ஆரம்ப மாகியது.

தொடர்ந்து தினமும் மாலை 7 மணி முதல் இளம் கலைஞர்களின் இசை நிகழ்வுகள் நடைபெற்றன. அ.ஜெயராமனின் வயலின் சோலோ வாத்தியம் சிறப்பாக ரசிகர்களைக் கவரும் வண்ணம் எல்லோரும் விரும் பிக் கேட்கும் மெலோடியிலான மெல் லிசைப் பாடல்களை வாசித்து பாராட் டுகளைப் பெற்றார்.

அ.ஜெயராமன் தரமான முன்னணி வயலின் வித்துவானாக விளங்கி வருகின்றமை சிறப்பானது. இந்த முறை இவ் விழாவில் பல புதுமுகங் கள் இசை நிகழ்வுகள் செய்வதும் பாராட்டுக்குரியன.

சு.கோபிதாஸ் குழுவினரின் வய லின் சோலோ பரமேஸ்வரி கணேசன், பொன்.வாமதேவன் உடுவில் நாட்டிய கலாகேந்திராவின் நாட்டியம் முதலான





பொன் சுந்தரலிங்கம், பத்மலிங்கம் முதலான கலைஞர்களால் ஆரம்பித்த இளம் கலைஞர் மன்ற தெய்வீக இசை யரங்கு தொடர்ந்து நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் சோ.பத்மநாதன், வி.சிவஞானசேகரம், ந.செல்வச் சந்திரன், ஆறு. திருமுருகன் ஆகியோ ரால் நடத்தப்பட்டு வருகின்றமை பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றமை ரசிகர்களுக்கு ஒரு பெருவிருந்தாக அமைகின்றன.

நல்லூரில் நடந்து வரும் நிகழ் வுகளை பார்ப்பதன் வாயிலாக ரசிக மக்களுக்கு ஓர் ஆனந்தமும் ஆறுதலும் அமைதியும் சாந்தமும் உண்டாகின் றன. ★











வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டி களில் தமது திறமைகளை வெளிக் காட்டி வெற்றியீட்டிய பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனின் அலுவலகத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.... (இ)

# மக்களைப் பழிவாங்கும் நோக்கில் செயற்படுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ!

கொழும்பு, ஓக. 19
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னைத் தோல்வியடையச் செய்த மக்களைபழிவாங்கும்நோக்கில் தொடர்ந்தும்செயற்படுகின்றார் என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் குறிப்பிட்டுள்ளவைவருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுகம் தனியார் மயமாக்கப்பட்டதன் ஊடாக நாட்டுக்கு பெரிய அழிவு ஏற்பட்டுள்ளதாக அறிக்கைவிடும் மஹிந்த ராஜபக்ஷ, தனது ஆட்சிக் காலத்தில் தேசிய வளங்களை மீளப்பெற முடியாதவாறு அந்நிய நாடுகளுக்கு விற்பனை செய்ததை மறந்து விட்டார்.

கொழும்பு துறைமுகத்தில் ஒரு பகுதியை 85 இற்கு 15 என்றவீதத்தின்அடிப்படையில் சீனாவிற்கு மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

இதே போன்றதொரு வீதத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் சீனாவுக்கு வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று செய்தார்.

இந்த ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் மேலும் 35 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை சீனாவிற்கு கடனாகச் செலுத்தும் நிலை ஏற்பட்டிருக்கும்.

10 ஆண்டுகள் நாட்டை ஆட்சிசெய்துதோல்வியடைந்து வீட்டுக்குச்சென்ற முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவார். இன, மத வாதத்திற்கு மீண்டும் நாட்டை பலிகொடுத்த நிலையிலேயே அதிகாரத்தை அவர் விட்டுச் சென்றார்.



நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிக்கிறார்

தற்போது முன்னெடுக்கப்படுகின்ற ஊழல் மோசடி விசாரணைகளின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் வசம் இருந்த சட்டவிரோதமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் நீதிமன்றம் மற்றும் அரச உடைமைகளாகக் காணப்படுகின்றன.

தானோ தனது குடும்பத்தினரோ ஒரு ரூபாவேனும் திருடியிருப்பார்களேயானால் வயிற்றை கிழித்துக் கொள்வோம் எனக் கூறிய மஹிந்த ராஜபக்ஷ தற்போது அந்த உறுதிமொழியையும் மறந்து விட்டார்.

உத்தேச புதிய அரசமைப்பு தொடர்பில் போலியான பிரசாரங்களை முன்னெடுப்பதோடு அரச சொத்துக்கள் தனியார் மயமாக்கப்படுகின்றன.

தேசிய சொத்துக்கள் அந்நிய நாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என மக்கள் மத்தியில் குழப்பத்தை தோற்றுவித்து வருகின்றார்.

விஹாரைகளில் அரசியல் செய்து நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரிய துரோகத்தை மஹிந்த ராஜபக்ஷ செய்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திருட்டுப்போன மோ.சைக்கிளை 15 நிமிடங்களில் மீட்டனர் நெல்லியடிப் பொலிஸார்!

பருத்தித்துறை, ஓக. 19
நெல்லியடி நகர்ப்புறப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று திருட்டுப் போன நிலையில், 15 நிமிடத்திற்குள் மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர் பொலிஸார்.

வடமராட்சி இரும்பு மதவடியைச் சேர்ந்த நபரொருவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வர்த்தக நிலையமொன்றுக்குப் பொருள்கள் வாங்குவதற்காகச் சென்றுள்ளார்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் காணாமற் போயிருப்பது கண்டு திகைப்படைந்த உரிமையாளர் நெல்லியடிப் பொலிஸிடம் முறையிட்டார்.

இதனையடுத்து, விரைந்து செயற்பட்ட நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் நெல்லியடி நகரில் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர்.

அங்கிருந்த காண்காணிப்புக் கமராக்களும் சோதனையிடப்பட்டன. இதன் காரணமாக இந்த மோட்டார் சைக்கிளை களவாடிய திருடன் எங்கும் கொண்டு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலையில் நெல்லியடியிலிருந்து வதிரி செல்லும் வீதியில் நிறுத்தி விட்டுத் தப்பித்துச் சென்றுள்ளான்.

நெல்லியடிப் பொலிஸாரின் விரைவான நடவடிக்கையால் திருட்டுப் போன மோட்டார் சைக்கிள் 15 நிமிடங்களில் மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸாரின்இந்தச்செயற்பாட்டைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

## பார்சிலோனா நகரில் நடைபெற்ற தாக்குதலுக்கு இலங்கை கண்டனம்!

கொழும்பு, ஓக. 19
ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்கு இலங்கை கண்டனம் வெளியிட்டுள்ளது.

பார்சிலோனாவின் லாஸ் ரம்ப்லாஸ் என்ற பிரபல சுற்றுலாப் தளத்தில் மக்கள் கூட்டம் உள்ள பகுதியில் கார் ஒன்றை மோதச் செய்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் 13 சுற்றுலா பயணிகள் பலியாகினர். அத்துடன், மேலும் 100 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும், அந்தக் காரைச் செலுத்திய சாரதி இன்னும் கைதாகவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள் ளனர். இதேவேளை, ஐ.எஸ். தீவிரவாதிகளாலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதை அந்த நாட்டின்



பிரதமர் மரியானோ ரஜோய் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான நிலையில், இந்தத் தாக்குதலை இலங்கை அரசு கண்டிக்கிறது என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம் என்றும் அவர் தனது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## என் வாயை எவராலும் அடைக்க முடியாது என்கிறார் ராமநாயக்க!

கொழும்பு, ஓக. 19
எனது வாயை எவராலும் அடைக்க முடியாது என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்புஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கள்வர்கள், ஊழல்மோசடிகளில் ஈடுபடுவோர், கொலைகாரர்கள் மற்றும் மதுபான விற்பனையாளர்களை அம்பலப் படுத்துவதற்கு நான் எடுக்கும் முயற்சியை எவராலும் தடுக்க முடியாது.

கடந்த 1948 ஆம் ஆண்டின் பின்னர்இந்தநாட்டில்உருவான மிகவும் ஜனநாயகமான அரசு இதுவாகும். இந்த அரசு 2020 ஆம் ஆண்டை விடவும் நீண்ட காலத்திற்கு ஆட்சியில் இருக்கும்.

தற்போதைய அரசு எவருக்கும் தொல்லை கொடுப்பதில்லை. தொழில் வாய்ப்பு வழங்கும் போதும் பிரதான கட்சிகளுக்கு சம சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சுதந்திரக் கட்சியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் ஐக்கிய தேசியக் கட்சியும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

அரசுக்குள் பிரச்சினை ஏற்பட்டால் அது இந்த அரசினதும் கடந்த அரசினதும் கள்வர்களையே பாதிக்கும். மக்களுக்காக குரல் கொடுப்பதை எவராலும் தடுக்கமுடியாது என அவர் தெரிவித்துள்ளார். (க)

## அர்ஜுன் அலோஸியஸுக்கு ஒரு மாதம் கிடைத்தது 35 கோடி ரூபா லாபப் பங்கு!

கொழும்பு, ஓக. 19
பெர்ப்பச்சுவல் ட்ரெஸரிஸ் குழுமத்தின் நிறுவனமொன்றால், அதன் உரிமையாளர் அர்ஜுன்அலோஸியஸ் மற்றும் அவரின்தந்தை ஆகியோருக்கு கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் சுமார் 35 கோடி ரூபா அளவான பணம் லாபபங்காக செலுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

ஆணைக்குழு விசாரணைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது, பெர்ப்பச்சுவல் ட்ரெஸரிஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் கசுன் பலிசேனவிடம் தொடர்ந்து 10 நாளாகவும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இந்த நிறுவனம் அதன் தாய் நிறுவனமான பெர்ப்பச்சுவல் எசெட் மெனேஜ்மன்ட் நிறுவனத்துக்கு 44 கோடியளவான லாப பங்கை கடந்த ஆண்டு இரண்டு சந்தர்ப்பங்களில்வழங்கியதாகஇதன்போது சாட்சியாளர் கூறியுள்ளார்.

அந்தலாப பங்கின்35 கோடி ரூபா பெர்ப்பச்சுவல் கெபிடல் ஹோல்டின்ஸிக்கு உரிமையாளராக உள்ள அர்ஜுன் அலோஸியஸ் மற்றும் அவரின் தந்தையான ஜெபரி அலோஸியஸ் ஆகியோருக்கு கிடைத்ததாக ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, குறித்த லாப பங்கிற்கு மேலும் பணத்தைச்சேர்த்து, வங்கி உள்ளிட்ட பல நிறுவனங்களின் 64 கோடி ரூபா அளவு பெறுமதியான வாக்குரிமை பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத தரப்பினர் சாட்சியாளர்களை விசாரணைக்கு உட்படுத்துவது நிறைவடைந்துள்ளது என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், பெர்ப்பச்சுவல் ட்ரெஸரிஸ் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட 2 லட்சத்து 40 ஆயிரம் குரல் பதிவுகள் மற்றும் 10 ஆயிரம் அளவான எழுத்தாவணங்கள் உள்ளிட்ட சாட்சிகளை விசாரிக்க குறைந்தது ஒருவாரகாலம் அவசியம் என சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, பெர்ப்பச்சுவல் ட்ரெஸரிஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேனவிடம் குறுக்கு விசாரணைகளை மேற்கொள்ள நேற்று வரை ஆணைக்குழுவின் அமர்வு ஒத்திவைக்கப்பட்டது. (க)

காலைக்கதிர் Kalaikkathir


# சிறையில் முருகன் ஜீவசமாதி அறிவிப்பு: நேற்று கோவிலில் நீண்ட நேரம் தரிசனம்



## கண்காணிப்பில் அதிகாரிகள்

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளி முருகன், நேற்று ஜீவசமாதி அடையப் போகிறேன் எனக் கூறியுள்ள நிலையில் அவரைச்சிறை அதிகாரிகள் தீவிர கண் காணிப்பு வளையத்துக்குள்கொண்டு வந்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில்ஆயுள்தண்டனை கைதிகளாக முருகன், அவரது மனைவி நளினி, பேரறிவாளன் ஆகியோர் வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கடந்த 26 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். முருகன் கடந்தசிலமாதங்களாகவே காவி உடை அணிந்து ஜடாமுடி தரித்து முழுக்க முழுக்க சாமியார் போல் மாறியுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு சிறைத்துறை கூடுதல் டி.ஜி.பி.க்கு முருகன் கடிதம் ஒன்றை அனுப்பினார். அதில் சிறை வாழ்க்கையைத் தொடர எனக்கு விருப்பமில்லை. எனக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. இதனால்ஆகஸ்ட் 18 ஆம் திகதி சிறையிலேயேஜீவசமாதிஅடைய உள்ளேன், அதற்கு அனுமதிக்கவேண்டும்என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, அன்று முதல் தினமும் ஒருவேளை மட்டும் உணவு சாப்பிட்டு வந்த அவர் மற்ற நேரங்களில் பழங்களைச் சாப்பிட்டு வந்தார்.

இம்மாதம் தொடக்கத்தில் இருந்து 3 வேளையும் வெறும் பழங்கள் மட்டும் சாப்பிட்டு வந்தார் என சிறைவட்டாரத்தில் கூறப்பட்டது.

இந்த நிலையில் முருகன் ஜீவசமாதி அடைய போகிறேன் என அளித்த நாளான நேற்றுக் காலை கண்விழித்த முருகன் யாரிடமும் பேசாமல் அமைதியாக சிறையில் உள்ள பெருமாள் கோயிலுக்குச் சென்றார். அங்கு தரையில் அமர்ந்து நீண்ட நேரம் சுவாமி தரிசனம் செய்தார். அவரது செயல்பாடுகளை சிறைத்துறை அதிகாரிகள் கண்காணித்தனர்.

கோவிலில் இருந்து முருகன் சாப்பிட வரவில்லை. சாப்பிட மறுத்து ஜீவசமாதிக்கான செயல்பாடுகளில் முருகன் இறங்கினார். சிறை அதிகாரிகள் அவரிடம் பேச்சு நடத்தினர். ஆனால், முருகன் சமாதானமாகவில்லை. முருகன்சாப்பிடவில்லையென்றாலும் ஜீவசமாதி நடவடிக்கையை கைவிட மறுத்தாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறையில் ஜீவசமாதி அடைவது என்பது முடியாத விடயம். இருந்த போதும், சிறையில் உள்ள முருகனைமிகத்தீவிரமாக கண்காணித்து வருகிறோம் என்று சிறைத் துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒருவர்தான்நினைத்த வாழ்வை நல்லபடியாக வாழ்ந்த பின்னர் போதும் இந்த உலக வாழ்க்கை என முடிவெடுத்து தனக்கான சமாதியை தானே அமைத்துக் கொண்டு, அதன் உள்ளே அமர்ந்து உணவு, நீர் அருந்தாமல் உயிர் துறப்பதே ஜீவசமாதியாகும்.

# 'இந்தியாவின் ஏழு பாவங்கள்' சீன ஊடகத்தில் பிரசாரம்




டோக்லாம் எல்லை விவகாரத்தில் இந்தியாவுக்குஎச்சரிக்கைவிடுத்து வரும் சீனா, தற்போது அதன் ஊடகம் வாயிலாக இந்தியாவின் செய்கைகளைக் கண்டிக்கத் தொடங்கிப் பிரசாரம் செய்து வருகிறது.

'சினுவா' செய்தி நிறுவனம் தனது ஆங்கில வீடியோவைவெளியிட்டு அதற்கு 'இந்தியாவின் 7 பாவங்கள்' என்று தலைப்பிட்டு இந்தியா 'பன்னாட்டுச் சட்டங்களை மீறுகிறது' என்றும் எது சரி எது தவறு என்பதைக் குழப்புகிறது என்றும் சாடியுள்ளது.

மேலும் டோக்லாம் பிரச்சினையை உடனே இந்தியா முடிவுக்குக் கொண்டு வர சீனா விரைவில் இறுதிக்கெடு விதிக்கும் என்று ஊடகம் தெரிவித்துள்ளது.

சினுவா நியூஸ் ஏஜென்சி வெளியிட்டுள்ள வீடியோவில், 'டோக்லாம் நெருக்கடி பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதை இந்தியா வேண்டுமென்றே மதிக்காமல் நடந்து கொள்கிறது' என்று கூறியுள்ளது.

இது குறித்து சீன அரசின் அதிகாரபூர்வ நிலைப்பாடு என்னவென்பது தெரியாவிட்டாலும் அரசு நாளிதழான 'குளோபல்டைம்ஸ்', ஓய்வுபெற்ற சீன இராணுவத்துறையைச்சேர்ந்தஸிகுவாங்யூ என்பவரை மேற்கோள் காட்டியுள்ளது, சீனப் பகுதியில் இந்தியா தனது படைகளைத் தொடர்ந்து நிறுத்திவந்தால் செப்ரெம்பருக்குள் சீனா இறுதிக் கெடு அறிவிக்கலாம் என்று கூறியுள்ளதை மேற்கோள்காட்டியுள்ளது.

அவர் மேலும் கூறியதாகக் காட்டப்பட்ட மேற்கோளில், இறுதிக்கெடு விடுத்த பிறகும் இந்தியா படைகளைத் திரும்பப் பெறவில்லையெனில் விளைவுகளுக்கு இந்தியாவே முழுப் பொறுப்பாகும். சீன இராணுவம் எந்த மாதிரியான நடவடிக்கையையும் மேற்கொள்ளத்தயங்காது என்று தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்தியா டோக்லாம் எல்லையிலிருந்து படைகளைத் திரும்பப்பெறவேண்டும் என்ற நிபந்தனையில் சீனா பின் வாங்கப்போவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியப் படைக்கு அதிநவீன அப்பாச்சி ரக ஹெலிகள்!

### பதற்றமான நிலையில் அவசர கொள்முதல்



இந்திய விமானப்படைக்கு சுமார்20 ஆயிரம் கோடி ரூபாயில் 22 அதிநவீனரகஅப்பாச்சிஹெலிக்கொப்டர்களும், 15 கனரக சினூக் ஹெலிக் கொப்டர்களும்கொள்முதல் செய்ய அமெரிக்க அரசுடன் 2015 ஆம் ஆண்டு ஒப் பந்தம் செய்யப்பட்டது. இதில் 11 அப்பாச்சி ஹெலிகொப்டர்களைதங்களுக்குவழங்க வேண் டும் என்று ராணுவம் கேட்டுக் கொண்டது.

இந் நிலையில், ராணுவ அமைச்சகத்தின் பாதுகாப்பு கையகப்படுத்துதல் கவுன்சிலில் கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. இந்தக் கூட் டத்துக்கு ராணுவ மந்திரி அருண் ஜெட்லி தலைமை தாங்கினார். கூட்டத்தில் ராணுவப்படைக்கு 6 அதிநவீன ஏ.எச்.64-இ ரக அப்பாச்சி ஹெலிகொப் டர்களை 4 ஆயிரத்து 168 கோடியில் அமெரிக்க அரசிடம் கொள்முதல் செய்ய ராணுவ அமைச்சகம் ஒப்புதல் அளித்தது. மேலும் ரஷ்யாவிடம் இருந்து 2 கப்பல்களுக்கு தேவையான 2 கியாஸ் டர்பைன் என்ஜின்களை ரூ.490 கோடி ரூபாயில் கொள்ளமுதல் செய்யவும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதுகுறித்து ராணுவ உயர் அதிகாரிகள் கூறுகையில்- எங்களின்நீண்ட நாள் கோரிக்கை தற்போது நிறைவேறிஉள்ளது. இந்த அதிநவீன ஆயுத வசதிகளுடன் கூடிய இந்த ஹெலிகொப்டர்கள் இரவு நேரத்திலும் சென்று தாக்கும் வல்லமை கொண்டவை. தற்போது எல்லைப் பகுதிகளில் நிலவும் பதற் றமான சூழ்நிலையில் இதுபோன்ற ஹெலிகொப்டர்கள் ராணுவப் படைக்கு மிகவும் அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜெயலலிதா மரணம்; அப்பலோ வெளியிட்ட திடீர் அறிக்கை



ஜெயலலிதா மரணம் தொடர்பாக தமிழக முதல்வர் பழனிச்சாமி அறிவித்தமை குறித்து அப்பலோ மருத்துவமனை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணத்திற்கு விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என தமிழக முதல்வர் பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

முதல்வரின் இந்த அறிவிப்புக்கு வரவேற்பு தெரிவித்து அப்பலோ மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அப்பலோ வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஜெயலலிதா மரணம் தொடர்பாக தமிழக அரசு எடுத்துள்ள முடிவு சிறந்த நடவடிக்கை. ஜெயலலிதாவை காப்பாற்ற அப்பலோ மருத்துவ குழு போராடியது.

இந்த விசாரணையின் மூலம் ஜெயலலிதாவிற்கு அளிக்கப்பட்ட சிறந்த சிகிச்சை வெளிச்சத்திற்கு வரும்.

தமிழக அரசின் இந்த முடிவை வரவேற்பதாக அப்பலோ மருத்துவமனை தெரிவித்துள்ளது.

# அ.தி.மு.க.வின் குடுமிபிடி சண்டை கேலிக்கூத்தாகிய தமிழக அரசியல்!



வைக்கோ

அ.தி.மு.கவின்குடுமிபிடிசண்டையால்தமிழக அரசியல்கேலிக்கூத்தாகிவிட்டது என புதுக்கோட்டையில்மதி.மு.க.பொதுச் செயலாளர்வைகோதெரிவித்துள்ளார்.


புதுக்கோட்டையில் மாவட்ட ம.தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்க வந்த அக் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இறப்பில் பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன என அரசியல் கட்சிகள் மட்டுமல்ல பொது மக்களும் கூறி வந்த நிலையில் அவரின் இறப்பு குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது வரவேற்கத்தக்கது.

இதேபோல் ஜெயலலிதா வாழ்ந்த வீடான போயஸ் கார்டன் வேதா நிலையத்தை அரசுடைமை ஆக்கி நினைவிடமாக மாற்றப் போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளதும் வரவேற்கத்தக்கது.

நீட் தேர்வால் தமிழக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசுநிரந்தரமாகத் தடை வாங்க முடியாவிட்டாலும், இந்த ஓர் ஆண்டாவது விலக்குக் கேட்டு முயற்சிஎடுத்துவருகிறது.

இதற்கு முன்னாள் மத்திய அமைச்சர்ப.சிதம்பரத்தின்மனைவிநளினி சிதம்பரம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளது அவரின் தொழில் தர்மம். ஆனால் வெளியில் அவர் 'நீட்' ஆதரவாக கருத்து தெரிவித்து வருகின்றமை கண்டிக்கத்தக்கது. அ.தி.மு.கவின் குடுமிப்பிடி சண்டையால் தமிழக அரசியல் கேலிக்கூத்தாகிவிட்டது என்று தெரிவித்துள்ளார்.



# ஸ்பெயினில் தீவிரவாதத் தாக்குதல்: 13 பேர் உயிரிழப்பு; 50 பேர் படுகாயம்

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் மக்கள் கூட்டத்திற்குள் வானால் மோதி தாக்குதல் மேற்கொண்டதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரின் முக்கிய சுற்றுலாத் தலம் லாஸ் ராம்பலாஸ். இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகளும், அந்நாட்டு மக்களும் குவிந்திருக்கின்றமை வழக்கம். மாலை நேரம் என்பதால் மக்கள் கூட்டம் அதிகமாகவே காணப்பட்ட நிலையில், திடீரென கூட்டத்திற்குள் வான் ஒன்று புகுந்தது.

கண்மூடித்தனமாக மக்கள் கூட்டத்திற்குள் நுழைந்த வான் மோதியதில் சம்பவ இடத்திலேயே 13 பேர் உயிரிழந்தனர். மேலும் 50 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.



தாக்குதலை மேற்கொண்ட வானின் சாரதியை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் 1989ஆண்டுமொரோக்கோவில் பிறந்தார் எனவும் குறித்த நபர் தனது பேஸ்புக் பக்கத்தில் கடற்கரைப் பிரதேசத்தில் அமர்ந்திருக்கும் புகைப்படமொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை தரவேற்றியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, லாஸ் ராம்பலாஸ் பகுதிக்கு யாரும் செல்ல முடியாத வண்ணம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் எவரையும் குறித்த பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் ஒரு தீவிரவாத தாக்குதல்தான் என்று பொலிஸார் உறுதி செய்துள்ளனர். இதனையடுத்து, நாடு முழுவதும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# மூன்றாம் உலகப் போர்




அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவார்.ரொனால்ட் ட்ரம்ப் சிரியா மீது தாக்குதல் நடத்துவார் எனவும் சரியாக எதிர்வுகூறிய தன்னைத்தானே கடவுளின் தூதுவர் எனக் கூறிக் கொள்ளும் மறைஞானியொருவர், மூன்றாம் உலகப் போர் ஆரம்பமாவதற்கு ஒரு சில வாரங்களேயுள்ளன என தற்போது எதிர்வுகூறியுள்ளார்.

மேற்படி அணு ஆயுதப்போர் கன்னி மரியாள் போர்த்துகல்லுக்கு விஜயம் செய்ததை குறிக்கும்நூற்றாண்டுவிழாவையொட்டி ஆரம்பமாகும் என ஹொராசியோ வில்லேகாஸ் என்ற மேற்படி மறைஞானி தெரிவித்துள்ளார்.

கன்னி மரியாள் 1917 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதிக்கும் அதே ஆண்டு ஒக்ரோபர் 13 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் 6 வேறுபட்ட தருணங்களில் போர்த்துக்கலிலுள்ள 3 இடையச் சிறுவர்களுக்கு காட்சியளித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது இரண்டாம் உலகப் போர் மற்றும் ரஷ்யா விலானமாற்றம் என்பன குறித்து கன்னி மரியாளால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் பின்னர் உண்மையில் நடந்தேறியதால் அவரது அந்தக்காட்சியளிப்புகள் உலகப் பிரபலம் பெற்றன.

போர்த்துக்கல் சிறார்களுக்கு கன்னி மரியாள் காட்சியளித்த ஆரம்ப தினமான மே மாதம் 13 ஆம் திகதிக்கும் இறுதி தினமான ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதிக்குமிடையில் ஒருபோதும் இடம்பெறாத வகையில் அதிகளவு நாசத்தையும் மரணத்தையும் ஏற்படுத்தக்கூடிய போரொன்றுக்கு தயாராக இருக்க வேண்டியதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என ஹொராசியோ வில்லேகாஸ் தெரிவித்துள்ளார்.

விமானங்கள் அத்துமீறினால் தாக்குவோம்!

# கட்டாருக்கு சவுதி விடுக்கும் எச்சரிக்கை: வளைகுடாவில் போர் வெடிக்கும் அபாயம்!



கட்டார் விமானங்கள் தம் நாட்டின் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தால் அதற்கெதிராக தாக்குதல் மேற்கொள்வதற்கான சகல அதிகாரங்களும் தமக்கு இருக்கின்றன என சவுதி அரேபியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயங்கரவாதிகள் மற்றும் ஈரானுடன் கட்டார் தொடர்புகளை வைத்துள்ளதாக குற்றம் சாட்டி சவுதிஅரேபியா தலைமையிலான நான்கு நாடுகள் இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டுள்ளன.

சவுதிஅரேபியா கட்டாருடனான உள் நாட்டு, வெளிநாட்டு தொடர்புகளை முற்றாகத் துண்டித்துக் கொண்ட நிலையில் சவுதி எல்லைக்குள் கட்டார் விமானங்கள் பறப்பதை தவிர்க்குமாறு அறிவித்திருந்தது.

கட்டார் அதற்கு செவிசாய்க்காமல் சவுதி அரேபிய எல்லைக்குள் அத்து மீறி நுழையுமெனில் தாக்குதல் நடத்தி விமானங்களை வீழ்த்த தங்கள் ஏவுகணைகள் மற்றும் விமானங்கள் எந்த நேரத்திலும் சீராகவும் தயாராகவும் உள்ளன என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலை தொடருமெனில் வளைகுடாவில் மற்றுமொரு போர் வெடிக்கும் அபாயம் உள்ளது என சர்வதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

# காங்கோவில் நிலச்சரிவு: 40 பேர் சாவு

மத்திய ஆபிரிக்க நாடான காங்கோவில் கன மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 40 பேர் பலியாகியுள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வருகின்றது.

காங்கோவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மீனவ கிராமத்தில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 40 பேர் பலியாகியுள்ளனர் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தற்போது அப்பகுதியில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான சியரா லியோனில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்துக்குள் சிக்கி 400 பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரிய தீபகற்பத்தில் போர் கிடையாது: தென்கொரிய ஜனாதிபதி திட்டவட்டம்

சியோல்.ஓக.19

கொரிய தீபகற்பத்தில் போருக்கு இடம் இல்லை என்றுதென்கொரியஜனாதிபதி மூன் ஜே இன் திட்டவட்டமாக கூறினார்.

வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்புச் சபை சமீபத்தில் புதிய பொருளாதார தடை ஒன்றை விதித்தது. இதற்கு அமெரிக்காதான்வழிவகுத்தது.

இதன்படி வடகொரியா நிலக்கரி, இரும்பு, இரும்புத்தாது, ஈயம், மீன், கடல் உணவுகள் உள்ளிட்டவற்றை ஏற்றுமதி செய்ய முடியாது. இதன் காரணமாக, வடகொரிய நாட்டுக்கு 6 ஆயிரத்து 500 கோடி ரூபாவருமானம் கிடைக்காமல் போகும்.

இதையடுத்து கொந்தளித்துப்போன வடகொரியா, மேற்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள அமெரிக்காவுக்குச் சொந்தமான குவாம் தீவின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்போவதாக அதிரடியாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து கொரிய தீபகற்பத்தில் போர் மோகம் சூழ்ந்தது.

தொடர்ந்து வடகொரியாவும், அமெரிக்காவும் ஒன்றுக்கு ஒன்று சளைத்தது இல்லை என்று கூறுகிற வகையில், இரு தரப்பினரும் வார்த்தை மோதல்களில் ஈடுபட்டு வந்தன.

ஒரு கட்டத்தில் குவாம் தீவின் மீதான தாக்குதல் திட்டம் பற்றி ராணுவ உயர் அதிகாரிகள் விளக்கியபோது, அதை ஆய்வு செய்த வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன் தாக்குதல் திட்டத்தைப் பிற் போட்டுள்ளார்.

இந்த நிலையில், வடகொரியாவின் அண்டை நாடான



தென்கொரியாவில் அதிபர் மூன் ஜே இன், தான் பதவி ஏற்று 100 நாள்கள் ஆனதை யொட்டி சியோல் நகரில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கொரியப் போரின் அழிவுகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அனைத்துதென்கொரியர்களும் கடுமையாக உழைத்து உள்ளனர்.


நான் என்ன விலை கொடுத்தேனும் இந்த தீபகற்ப பகுதியில்போரைத்தடுப்பேன். எனவே, கொரிய தீபகற்ப பகுதியில் போர் கிடையாது என்பதை தென் கொரியர்கள் உறுதியாக நம்பலாம்.

எங்கள் உடன்பாடு இன்றி எவரும் கொரிய தீபகற்ப பகுதியில் ராணுவ நடவடிக்கை எடுக்க முடியாது.

அமெரிக்காவும், அந்த நாட்டின் ஜனாதிபதி ட்ரம்பும் கூட, வடகொரியா பற்றி அவர்கள் (தென்கொரியா) என்ன முடிவு எடுத்தாலும் பரவாய் இல்லை. ஆனால், தென்கொரியாவுடன் கலந்து ஆலோசித்து உடன்பாடு ஏற்படுத்தித்தான் எல்லா முடிவுகளும் எடுக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளனர்.

வடகொரியாவின் அணு ஆயுதத்திட்டங்கள், ஏவுகணை திட்டங்கள் தொடர்பான அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கையை நாங்கள் திரம்பட நிராகரிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

# 2018 இளையோர் உலகக் கிண்ணப் போட்டி அட்டவணை வெளியீடு




சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் 2 வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் இடம்பெறும் போட்டிகள் குறித்த விவரங்கள்தற்பொழுது உத்யோகபூர்வமாக வெளியிடப் பட்டுள்ளன.

இம்முறை இடம்பெறும் 12ஆவது இளையோர் உலகக் கிண்ணப் போட்டிகள் எதிர் வரும் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி வரை நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது. அந்நாட்டின் க்ரைஸ்சேர்ச், குயின்ஸ் டவுண், தவுரங்கா, சங்கரேய் உள்ளிட்ட 4 முக்கிய மைதானங்களில் இப்போட்டிகள் அனைத்தும் நடைபெறவுள்ளன

இப்போட்டித் தொடரின் நடப்புச் சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட அணிகளும் அண்மையில் டெஸ்ட் தரம் பெற்ற ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகளும் நேரடியாகத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளன. ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கிடையில் நடைபெற்ற அங்கத்துவநாடுகளுக்கிடையிலான போட்டியில்முதல்2இடங்களைப் பெற்றுக்கொண்ட 4 அணிகளும் இம்முறை உலகக் கிண்ணத்தில் விளையாடுவதற்கு தகுதிபெற்றன. இதன்படி, முதல் சுற்றில் 16 அணிகள் 4 குழுக்களில் போட்டியிடவுள்ளன.

தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் போட்டியிடவுள்ளதுடன், மற்றைய போட்டியில் பங்களாதேஷ் மற்றும்நமீபியாஅணிகள் போட்டியிடவுள்ளன. இதே தினத்தன்று இடம்பெறும் மற்றும் இரு ஆட்டங்களாக பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் மற்றும் பப்புவா நியூகினியா - ஸிம்பாப்வே ஆகிய அணிகளது பலப்பரீட்சைகளும் இடம்பெறவுள்ளன.

அதன்பின்னர் ஜனவரி 14ஆம் திகதி நடைபெறவுள்ள ஈ குழுவிற்கான முதல் போட்டியில் இலங்கை அணி அயர்லாந்து அணியைச் சந்திக்கவுள்ளதுடன், 17ஆம் திகதி ஆப்கானிஸ்தானையும், 19ஆம் திகதி பாகிஸ்தானையும் இலங்கை அணி சந்திக்கவுள்ளது.

இந்திய அணி தனது முதல் போட்டியில் பிரபல ஆஸ்திரேலிய அணியை ஜனவரி 14ஆம் திகதி சந்திக்கவுள்ளதுடன், ஜனவரி 16ஆம் திகதி பப்புவா நியூகினியாவையும், ஜனவரி 19ஆம் திகதி ஸிம்பாப்வே அணியையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து ஒவ்வொரு குழுக்களிலும் புள்ளிகள் அடிப்படையில்முதல்2இடங்களைப் பெற்றுக்கொள்ளும் அணிகள் சுப்பர் லீக் சுற்றுக்குத் தெரிவாகும். அதேவேளை, எஞ்சியுள்ள 8 அணிகளும் ப்ளேட் சுற்றில் போட்டியிடவுள்ளன. அத்துடன், அரையிறுதிப் போட்டிகள் 29ஆம் மற்றும் 30ஆம் திகதிகளிலும், இறுதிப் போட்டிகள் 3ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

கடந்த 2016ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற இளையோர் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணியை மேற்கிந்திய தீவுகள் அணி வீழ்த்தி இளையோர் உலகக் கிண்ண வரலாற்றில் முதல் தடவையாக சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்துக்கது.

# சின்சினாட்டி டென்னிஸ்: காலிறுதியில்




**சிமோன் ஹால்ப்**

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் ரூமேனியா வீராங்கனை சிமோன் ஹால்ப் 6:4, 6:3 என்ற நேர்செட் கணக்கில் லத்வியா வீராங்கனை செவஸ்டோவாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இதன்மூலம் தரவரிசையில் 2ஆம் வரிசையில் உள்ள ஹால்ப்முதல்இடத்தைநெருங்கி உள்ளார். அவர் காலிறுதியில் இங்கிலாந்து வீராங்கனை கோன்டாவுடன் மோதுகிறார். மற்றொரு காலிறுதியில் ஸ்பெயினின் முருகுஜா – ரஷ்யாவின் குசஸ்செட்சோவா ஆகியோர் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முக்கிய கட்டத்தில் மலிங்க 300 விக்கெட்டுக்களை எட்ட இன்னும் 2 தான் தேவை



இந்தியாவுக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளரான லசித் மலிங்க முக்கியமான கட்டத்தைக் கடக்கவுள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் லசித் மலிங்க 300 விக்கெட்டுகளை எட்ட இன்னும் இரண்டு விக்கெட்டுக்கள்தான் அவருக்குத் தேவைப்படுகின்றன. இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள இந்த ஒரு நாள் தொடரில் லசித் மலிங்க அந்த மைல்கல்லை எட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி இலங்கையுடன் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் மோதவுள்ளது. இந்தத் தொடரின் முதலாவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தம்புள்ளை ரங்கிரி மைதானத்தில் பகலிரவு போட்டியாக நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் மலிங்க களமிறங்குகின்றமை அவரது 200ஆவது ஒருநாள் போட்டியாகும். இலங்கை அணியின் நட்சத்திர வேகப் பந்து வீச்சாளரான லசித் மலிங்க இதுவரையில் 199 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 298 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

உலகில் இதுவரையில் ஒருநாள் போட்டிகளில் 300 விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர்கள் மொத்தம் 12 பேர்தான். இதில் இலங்கை அணியின் முத்தையா முரளிதரன், சனத் ஜயசூரிய மற்றும் சமிந்த வாஸ் ஆகியோர் உள்ளனர். இதுவரையில் 298 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள லசித் மலிங்க, இதில் மூன்றுமுறை ஹெட்ரிக் விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளமை விசேட அம்சமாகும். அதுவும் இரண்டு ஹெட்ரிக்குகளை ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரின்போது வீழ்த்தியுள்ளார். அதன்மூலம் உலகக் கிண்ணத் தொடர் போட்டிகளில் இரண்டு ஹெட்ரிக் விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர் என்ற பெருமையை லசித் மலிங்க தம்வசம் கொண்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரா நடைபெறவுள்ள ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் லசித் மலிங்க 300 விக்கெட்டுக்கள் என்ற மைல்கல்லை எட்டிச் சாதனை படைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அப்பாவின் கனவை நிறைவேற்றிய பிரபல வீரர்: நெகிழ்ச்சி தருணம்




இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஹர்திக் பண்டையா தனது அப்பாவுக்கு சொகுசு கார் வாங்கி கொடுத்து அவரின் கனவை நிறைவேற்றியுள்ளார்.

இலங்கை அணியுடனான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்தியவீரர்ஹர்திக்பண்டையா அதிரடி சதமடித்து பலரின் பாராட்டுகளைப் பெற்றார்.

இந்நிலையில், தனது அப்பாவின் கனவான சொகுசு காரை அவருக்கு வாங்கி தர வேண்டும் என நீண்ட நாள் களாக தனக்குள் இருந்த ஆசையை ஹர்திக் பண்டையா தற்போது நிறைவேற்றியிருக்கின்றார்.

எனக்காக பல தியாகங்கள் செய்த அப்பாவின் முகத்தில் மகிழ்ச்சியை பார்ப்பது ஆனந்தமாக உள்ளது என ஹர்திக் பண்டையா நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.



# சுயமாகத் தீர்மானிக்க எனக்கு அதிகாரம் கிடைத்துள்ளது!

## உபுல் தரங்க கூறுகிறார்

போட்டிகளின்போது சுயமாகத் தீர்மானிக்கும் அதிகாரம் தனக்கு வழங்கப்பட்டுள்ளது என இலங்கையின் இருவகை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் அணிகளுக்கான தலைவர் உபுல் தரங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர்பாக அணியின் நிலைமை குறித்து ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் எஸ்.எஸ்.சி.யின் தற்காலிக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான தொடரின்போது உபுல் தரங்க அணியை சிறப்பாக வழிநடத்துவார் என தனக்கு பூரண நம்பிக்கை இருக்கின்றது என தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலிய ஆகிய நாடுகளுக்கு எதிரான சர்வதேச இருபது 20 தொடர்களில் வெற்றியீட்டிக் கொடுத்ததை சுட்டிக்காட்டி இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

போட்டிகளின்போது அணித் தலைவர் என்ற வகையில் தனித் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் எனக்கு இருக்கின்றது. தெரிவுக் குழுவினர், கிரிக்கெட் நிறுவனத்தினர், பயிற்றுநர்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு நல்குகின்றனர். பெரும்பாலும் போட்டி நடைபெறும் போது தலைவர் என்ற வகையில் இறுதியில் எதைத் தீர்மானிக்க வேண்டும் என்பதை நான் நன்கு அறிவேன். அவ்வாறான தீர்மானம் எடுப்பதற்கு எனக்கு தகுதி இருக்கின்றது. அதற்கான அதிகாரத்தை எனக்கு கொடுத்திருக்கின்றார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை அணி முன்நோக்கி நகர்வதாக இருந்தால் தோல்விகளை மிக விரைவாக மறக்கவேண்டும் என்றும் உபுல் தரங்க குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு எதிரான மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் அடைந்த தோல்விகளை விரைவாக மறந்து, அத் தோல்விகளின்போது கற்ற பாடங்களைக் கொண்டு இலங்கை அணி ஒருநாள் தொடரை எதிர்கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள தொடரை முன்னிட்டு சிறந்த அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது என அணித் தலைவர் என்ற வகையில் கருதுகின்றேன். அணி என்ற வகையில் எமது திறமையை, எமது இருப்பை எடுத்துக்காட்ட இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

எமது அணியில் சிரேஷ்ட வீரர்கள், இளம் வீரர்கள் என கலந்து இருக்கின்றார்கள். இவ் வீரர்களைக் கொண்டு இதனை விட திறமையை வெளிப்படுத்த முடியும் என எண்ணுகின்றேன். அணி என்ற வகையில் எமது நிலையை, இருப்பை முழு உலகுக்கும் எடுத்துக்காட்ட இந்த ஒருநாள் தொடர் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். உலகிலேயே அதிசிறந்த அணி இந்தியாவாகும். அந்த அணியை இங்கிலாந்தில் நாங்கள் வெற்றி கொண்டோம். அதன் மூலம் கிடைத்த நம்பிக்கை முழு அணிக்கும் இருக்கின்றது. இந்தியாவுக்கு எதிராக அவர்களது சொந்த மண்ணில் 320 ஓட் டங்களைக் கடந்து வெற்றியை ஈட்டியமையால் நாங்கள் சிறந்த மனோநிலையில் இருக்கின் றோம்.

டெஸ்ட் போட்டியும் ஒரு நாள் போட்டியும் இருவகையானவை. அதற்கேற்ப எங்களை மாற்றிக்கொள்ளும் பக்குவம் எம்மிடம் இருக்கின்றது. பந்துவீச்சாளர்களை எடுத்துக் கொண்டால் மூவர் அணியில் இல்லை. குறிப்பாக, சுரங்க லக்மால், நுவன் பிரதீப், நுவன் குலசேகர ஆகிய மூவரும் உபாதை காரணமாக அணியில் இடம்பெறவில்லை. எனினும் தற்போதுள்ள புதிய பந்துவீச்சாளர்கள் உட்பட ஏனையவர்கள் மீது எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. நம்பிக்கை இல்லாமல் முன்நோக்கி நகர முடியாது. திறமையும் அனுபவமும் வாய்ந்த (லசித்) மலிங்க அணியில் இடம்பெறுவது முழு அணிக்கும் பலம் சேர்க்கின்றது எனலாம். அஞ்சலோ மத்தியூஸும் பந்து வீச்சை ஆரம்பிப்பார் என வெகுவாக எதிர்பார்க்கின்றோம்.

திசர பெரேரா அணியில் இணைக்கப்பட்டதை நியாயமானது 'சுதிசர பெரேரா ஓர் அனுபவம் வாய்ந்த கிரிக்கெட் வீரர். அவர் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் விளையாடி தனது திறமையை நிரூபித்தார். சில சந்தர்ப்பங்களில் அவர் பிரகாசிக்கத் தவறியுள்ளார். ஆனால் உபாதைகள் போன்று விளையாட்டில் பிரகாசிப்பதும் தவறுவதும் இயல்பு. வீரர்கள் மேடு பள்ளங்களை சந்திக்கத்தான் செய்வார்கள். இந்தியா போன்ற ஒரு சிறந்த அணியை எதிர்கொள்ளும்போது மத்திய கீழ் துடுப்பாட்ட வரிசையில் அனுபவம் வாய்ந்த வீரர் தேவை என எண்ணினோம். எனவே திசரதான் பொருத்தமானவர் என நாங்கள் அனைவரும் எண்ணினோம். அவர் ஒரு சிறந்த சகலதுறை வீரரும் ஆவார். மேலும் எங்களுக்கு இரண்டு வேகப்பந்துவீச்சு சகலதுறை வீரர்கள் தேவை. இவற்றைக் கருத்தில் கொண்டே அவரைத் தெரிவு செய்தோம் என்று தெரிவித்துள்ளார்.

# ஆஸ்திரேலியாவுக்கு சவாலாகும் இந்தியத் தொடர்

## மைக்கல் கிளார்க்



இந்திய அணிக்கு எதிராக அடுத்த மாதம் ஆரம்பமாகின்ற கிரிக்கெட் தொடர் ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் சவால் மிக்கதாக இருக்கும் என்று ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

செப்ரெம்பர் - ஒக்ரோபர் மாதங்களில் ஐந்து ஒருநாள் மற்றும் 3, 20-20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியா செல்லவுள்ளது. இந்திய அணி தற் போது பலமாக உள்ள நிலையில், இந்த தொடர் ஆஸ்திரேலியாவுக்கு இலகுவாக இருக்காது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், இந்திய அணித் தலைவர் விரோட் கோஹ்லி, மிகச்சிறந்த வீரர் என்றும் அவரை ஓர் ஆஸ்திரேலியராகக் காண்பதாகவும் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

காலாகாலமாக ஆஸ்திரேலிய வீரர்கள் கிரிக்கெட் போட்டிகளில் பின்பற்றிவந்த நுட்பங்கள் மற்றும் மனநிலையுடனேயே விராட் கோஹ்லி செயற்படுகின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உதைபந்து ரசிகர்களை ஏமாற்றிய போல்ட்



தடகளப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள உசைன் போல்ட், மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக உதைபந்து விளையாட இருந்த நிலையில் காயம் காரணமாக அப்போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

தடகளப் போட்டிகளில் பல சாதனைகள் படைத்துள்ள உசேன் போல்ட், லண்டனில் சமீபத்தில் நடந்த உலக தட களப் போட்டிகளில் ஒரே ஒரு வெண்கலம் மட்டும் வென்று ஓய்வு பெற்றார்.

இந்தச் சாதனை மன்னன், அடுத்ததாக, உதைபந்து போட்டியில் களமிறங்க இருந்தார். அதுவும், உலகப் புகழ் பெற்ற, மான்செஸ்டர் யுனை டெட் அணிக்காக விளையாட இருந்தார்.

தனது கடைசிப் போட்டியில் காயமடைந்த அவர் உடல்நலம் தேறினால், செப்ரெம்பர் 2 ஆம் திகதி நடக்க உள்ள மான்செஸ்டர் யுனைடெட் மற்றும் பார்சிலோனா அணிகளுக்கு இடையேயான போட்டியில் விளையாடுவார் என்று கூறப்பட்டது.

மான்செஸ்டர் யுனைடெட் பவுண்டேசன் நிறுவனத்திற்கு நிதி திரட்டுவதற்காக நடத்தப்படும் இந்த காட்சிப் போட்டியில், மான்செஸ்டர் அணியின் ஜாம்பவான்கள் ரியான் கிக்ஸ், பால் ஸ்கோல்ஸ் போன்றோருடன் இணைந்து போல்ட் விளையாட இருந்தார்.

இந்நிலையில், உசைன் போல்ட் காயம் காரணமாக மூன்று மாதங்கள் கட்டாய ஓய்வு எடுக்க வேண்டிய நிலையில் உள்ளார் என அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனால், அடுத்த மாதம் நடைபெற உள்ள உதைபந்துப் போட்டியில் அவர் விளையாடமாட்டார் என்பது உறுதியாகி உள்ளது.

இந்தச் செய்தி உசைன் போல்ட் மற்றும் மான்செஸ்டர் அணியின் ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

# இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஒரு டெஸ்ட்டை பகலிரவாக நடத்தத் திட்டம்



இலங்கை - பாகிஸ்தான் அணிகள் விளையாடவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஒரு போட்டியை பகலிரவுப் போட்டியாக நடத்த திட்டம் உள்ளது என இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடைசி இருபதுக்கு 20 போட்டியை கராச்சி அல்லது லாகூரில் நடத்தவும் தாம் எண்ணியுள்ளார் என அவர் குறிப்பிட்டார்.

தற்போது டெஸ்ட் போட்டிகளுக்கு பார்வையாளர்கள் குறைந்து வருகிறார்கள். அதனால் பகலிரவு டெஸ்ட் போட்டிகளை ஐ.சி.சி. அறிமுகப்படுத்தியது. அந்தவகையில் இது வரையில் நான்கு பகலிரவு டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இந்நிலையில், மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதும் பகலிரவு டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

இங்கிலாந்து அணி விளையாடும் முதல் பகலிரவு டெஸ்ட் போட்டி இதுதான். இங்கிலாந்தில் நடைபெறுகிற முதல் பகலிரவு டெஸ்ட் போட்டியும் இதுதான். மேற்கிந்தியத் தீவுகள் அணி, பாகிஸ்தானுக்கு எதிராகப் பகலிரவு டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ளது.

இதனால் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலும் பகலிரவு டெஸ்ட் போட்டியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்

## 2 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்பட்டது.

அதன்போதே அவரைக் கைதுசெய்து பொலிஸாரிடம் தாம் ஒப்படைத்தனர் என சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர். (உ)

## யாழ்.நகரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையீட்டு மனுவை நீதிமன்றம் நேற்றுப் பரிசீலித்தது. எதிர் மனுதாரருக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் பிறப்பிக்கவும் நீதிமன்று பணித்தது.

நீதியரசர்கள்எம்.எம்.ஏ.கபூர், எஸ்.துரைராஜா ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை வழங்கியது.

மேற்படி ஒன்பது கடைகளில் எட்டுக் கடைகளின் உரிமையாளர்கள் சார்பில் இந்த மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளரும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருமானபொன்னம்பலம் தயானந்தன் இந்த மனுவில் எதிர்மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி ஷர்மிளா ஹிண்ட் அனுசரனையுடன் சட்டத்தரணிகள் கே.வி.எஸ். கணேஷராஜா, சாரா ஜோர்ஜ் ஆகியோர் பிரசன்னமாகி வாதாடினர்.

அரசகாணிகள்மீளுடைமையாக்கல் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்ற விசாரணைகளின் போது ஆட்சேபனை தெரிவிக்கவும், காரணங்களைக் கேட்கவும், விசாரிக்கவும் உள்ள சந்தர்ப்பத்தைத் தங்களுக்கு உறுதிப்படுத்துமாறும் –

இந்த விவகாரம் தொடர்பாக யாழ். நீதிவான் நீதிமன்றம் மற்றும் மாகாண மேல்நீதிமன்றம் ஆகியன வழங்கிய உத்தரவுகளைத் தள்ளுபடி செய்யும்படியும் –

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த மனு மீதான விசாரணைகள் முடியும் வரை யாழ். நீதிவான் நீதிமன்றத்தின் இவ்விடயம் தொடர்பான விசாரணைகளுக்குத் இடைக்காலத் தடை விதிக்குமாறும் –

மனுதாரர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர்.

## சட்டத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

ஜனநாயக விழுமியங்களுக்கு முரணாக இருவேறு நிலைப்பாடுகளுடன் கட்சிசெயற்படுகின்றது. சட்டத்துக்குமாறாக என்னைக் கட்சியிலிருந்து நீக்கினால் நான் நீதிமன்றத்தை நாடுவேன்" – என்றார் .

ரெலோவின் தலைமைக் குழுவின் கடந்த அமர்வின்போது அமைச்சர் டெனீஸ்வரைப் பதவி விலகுமாறு கட்சி வலியுறுத்தியிருந்தது. இருப்பினும் டெனீஸ்வரன் தானாகப் பதவி விலகப்போவதில்லையெனவும், தேவையானால் கட்சி தன்னை விலக்குவதாக இருந்தால் விலக்கட்டும் என அறிவித்திருந்தார்.

இந்நிலையில், நாளை அமைச்சர் டெனீஸ்வரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள கட்சியின் தலைமைக் குழு மீண்டும் கூடவுள்ளது. என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## ரணிலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம்ஒன்றை அமைப்பதே எமது விருப்பம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும்நாம் வெற்றி பெறவே விரும்புவோம். கட்சி என்ற அடிப்படையில் எமது நோக்கும் அதுதான். ஜனாதிபதித் தேர்தலிலும் எமது கட்சியின் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவே நாம் விரும்புவோம்.

"ஆனால் பிரதமரை மாற்றும் திட்டம் எதுவும் இல்லை. பிரதான இரு கட்சிகளும் இணைந்தமைக்குக் காரணம் இருக்கின்றது. எந்த வொரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இரண்டு கட்சிகளும் எதிர்க்கட்சியிலிருந்து சில ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்திருக்க முடியும்.

"எனினும் தனியாக ஒரு கட்சியால் சாதிக்க முடியாத, அல்லது அடைந்துகொள்ள முடியாத இலக்கை அடைந்து கொள்வதற்கு சக்திமிக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காகவே இணைந்து தேசிய அர சாங்கத்தை அமைத்துள்ளோம். இதுவே எமது நோக்கம். அதனை நாம் கைவிடவில்லை. இது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமல்ல.

"ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து உருவாக்கிய தேசிய அரசாங்கம் இது. ஆகவே பிரதமரை வெளியேற்றி புதிய பிரதமரை நியமிக்க வேண்டிய எந்த வொரு தேவையும் எமது கட்சிக்கு இல்லை. மத்திய செயற்குழுவின் அனுமதிக்கு அமையவே தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளோம்.

"டிசம்பர் மாதம் எமது ஒப்பந்தம் நிறைவடைகின்றது. ஆகவே அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்னவென மீண்டும் பேசி தீர்மானிக்க முடியும். அந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு தீர்மானத்திற்கு வரும். ஆகவே இரண்டு கட்சிகளும் மீண்டும் பேசி தொடர்ந்து பயணிப்பதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஊடாகக் களமிறங்கக்கூடிய தகுதியான வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவே. அவரே இந்த காலப்பகுதியில் மக்களுக்கு வெற்றியை தேடித்தந்த பிரதான தலைவர்.

"யாப்பிற்கு அமையவும் மீண்டும் ஜனாதிபதியாகக்கூடிய தகுதி அவருக்கு மாத்திரமே காணப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா விற்கோ அல்லது மஹிந்த ராஜபக்ஷவிற்கோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆகவே அவரே தகுதியான நபர் என்பது எமது கட்சியின் கருத்து. எனினும். அவரது தனிப்பட்ட முடிவுகள் எவ்வாறு அமையுமென்பதைப் பொருத்திருந்தே பார்க்க வேண்டும்." – இப்படி அவர் மேலும் கூறினார்.

(உ)

## டெனீஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், ரெலோவின் தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் அன்றைய தினம் பிறிதொரு நிகழ்வில் பங்குபற்ற வேண்டியிருப்பதால் இந்தக் கூட்டம் நாளை பிற்பகலுக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு எதிரான மனு உயர் நீதிமன்றால் தள்ளுபடி

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக பொதுமக்களின் காணிகள் கையேற்கப்பட்டதை எதிர்த்து பொதுமகன் ஒருவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த நடராஜா குணசேகரம் என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, தற்போதைய பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் உள்ளிட்ட ஆறுபேர் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டமையால் நாம் அகதிகளாக வாழ நேர்ந்துள்ளது. யுத்தம் நிறைவடைந்த பின்னரும் குறித்த பகுதி உயர்பாதுகாப்பு வலயமாகப்பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே காணி கையகப்படுத்தலைத் தடை செய்து பொதுமக்களின் காணிகளைத் திரும்ப வழங்குங்கள் எனக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எனினும் பதில் மனுதாக்கல் செய்திருந்த இராணுவத்தளபதி குறித்த பிரதேசம் பாதுகாப்பு ரீதியாக முக்கியமான பிரதேசம் என்றும், காணிகள் காணிகையகப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் முறைப்படியே கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன எனஉயர்நீதிமன்றத்துக்கு தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து முறைப்பாட்டாளர் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டதை சரிவர நிரூபிக்கவில்லை என்று தெரிவித்து உயர் நீதிமன்றம் இந்த மனுவை நிராகரித்துள்ளது.

## நாமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித் துள்ளது.

குற்றவியல் சட்டத்தின் கீழ் நாமல் ராஜபக்ஷவை நீதிமன்றத்தில்நிறுத்திவிசாரணைநடத்துவதற்கு உத்தரவிடக் கோரி, நிதி மோசடிதொடர்பான விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

எனினும், அந்த கோரிக்கை நேற்று நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட நிலையில், பொலிஸ் அதிகாரத்தின் கீழ் நாமல் ராஜபக்ஷவை விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும்நிலையிலேயே இந்தப் புனரமைப்புப் பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி கோப்பாய் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் இந்தியப் படையினர் ஐவர் கொல்லப்பட்டனர்.

அவர்களின் நினைவாக, அவர்கள் கொல்லப்பட்ட இடத்தில் இந்தியப் படையினர் நினைவிடம் ஒன்றை அமைத்திருந்தனர். தனியார் ஒருவரின் தோட்டக் காணியில் சமாதி போன்று அமைக்கப்பட்ட அந்த நினைவிடம் புற்களுக்கு நடுவே மறைந்திருந்த நிலையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்த நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த இந்தியப் படை அதிகாரிகள் வருகை தரவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. அதற்காக இலங்கைப் படை யினர் நேற்று முழுநாளும் அந்த நினைவிடத்தைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஆயுதம்தாங்கிய படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்க இந்தப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றன. அது தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களும் அந்த இடத்திற்கு அனுமதிக்கப்படவில்லை.

கடந்த முப்பது வருடங்களாக தமிழ் மக்களுக்காகப் போரிட்டு உயிர்த்தியாகம் செய்த தமிழ் இளைஞர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை இடித்து அழித்துவிட்டு, அங்கு முகாம் அமைத்து தங்கியிருக்கும் படையினர், அந்தத் துயிலும் இல்லத்திற்கு 200 மீற்றர் தூரத்தில், இந்தியப் படையினருக்கான நினைவிடத்தைப் புனரமைத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள்எதனையும்நிறைவு செய்யவில்லையெனவும், அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், கூட்டு எதிரணியின் நாடாளுமன்றஉறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ஸ, பந்துல குணவர்தன, டலஸ் அழகப்பெரும, குமார வெல்கம, பிரசன்ன ரணதுங்க, நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் பவித்ரா வன்னியாராச்சி போன்றோர் கலந்துகொண்டனர்.

## கடற்படையின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன வரும் 22 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ள நிலையிலேயே அத் தினத்தில் இருந்து புதிய கடற்படைத்தளபதியாகறியர்அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ளார்.

1960 முதல் 1970 வரை இலங்கையில் கடற்படைத் தளபதியாக இருந்தவர் யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த ராஜன்கதிர்காமர் என அழைக்கப்படும் ராஜநாதன் கதிர்காமர். 1922 இல் பிறந்த இவர் தமது 38 ஆவது வயதில் கடற்படைத் தளபதியானவர். இலங்கையின் வரலாற்றில் மிக இளவயதில் கடற்படைத் தளபதியானவரும், நீண்ட காலம் கடற்படைத் தளபதியாக இருந்தவரும் ரியர் அட்மிரல் ராஜன் கதிர்காமர்தான். இவர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மூத்த சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ராஜன் கதிர்காமர் 2003 இல் காலமானார்.

அவருக்குப் பின்னர் – 47 ஆண்டுகள் கழித்து இன்னொரு தமிழர் – ட்ரவிஸ் சின்னையா இலங்கையின் கடற்படைத் தளபதியாகப் பதவியேற்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வாக்களிப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடம் கோரிக்கை விடுத்தவர்களே இன்று ஒற்றுமையின்றி இருக்கிறார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், வடமாகாண சபை மீது தமிழ் மக்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

"வடமாகாண சபை உருவாக்கும் போது எமது மக்கள் பெரும் எதிர்பார்ப்பில் இருந்தனர். எனினும், இன்று வடமாகாண சபை மீது மக்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர்.

"இவ்வாறான வடக்குமாகாண சபை தேவைதானா என்று மக்கள் எண்ண ஆரம்பித்துள்ளனர். தேர்தல் காலங்களில் ஒன்றுமையுடன் வாக்களியுங்கள் என மக்களிடம் கோரிக்கை விடுத்தவர்களே இன்று ஒற்றுமையின்றி இருக்கின்றனர்.

"ஒரு பெரும் யுத்த அழிவுக்கு பின்னர் உருவாக்கப்பட்ட வடமாகாண சபை மக்களின் விடிவுக்காகஉழைக்கும்என்றஎதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் இருந்தது.

"வடக்கு மக்களிடத்தில் மாத்திரமின்றி உலகம் முழுவதும் வாழும் மக்கள் மத்தியில் இந்த எதிர்பார்ப்பு இருந்தது. எனினும், அந்த எதிர்பார்ப்பு வீணாக்கப்பட்டுள்ளது.

"மக்களுக்கு நன்மை செய்வோம் என கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த மாகாண சபை உறுப்பினர்கள், மக்களுக்கு நன்மை ஏதும்செய்யவில்லை. அத்துடன், தங்களுக்குள் சண்டையிட்டு கொள்கின்றார்கள்.

"வடமாகாண சபை கடந்த காலங்களில் ஊழல் நிறைந்த சபையாக செயற்பட்டு வெளிவந்திருப்பது வெட்கக் கேடானது. முதலமைச்சர் தன்னுடைய அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றார். அமைச்சர்கள் ஏனைய அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றார்கள். அவர்களுடைய கட்சியின் தலைமைக்கு எதிராக அவர்களே பிரசாரம் செய்கின்றார்கள்.

"கட்சியின் தலைமை தன்னுடைய உறுப்பினர்களுக்கு எதிராக பிரசாரம் செய்கின்றது. இவ்வாறானவர்கள் எவ்வாறு மக்களுக்குச் சேவை செய்யப்போகின்றார்கள்? – எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

## அரசுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிக் சொல்ஹெய்ம்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்களிலும், அமைதி முயற்சிகளிலும் அனுசரணைப்பணிவகித்தநோர்வேயின் சார்பில் பிரதான பங்களித்தவர் எரிக் சொல்ஹெய்ம். அவர் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பிரபாகரன் எப்படிக் கொல்லப்பட்டார் என்பது எனக்குத் தெரியவில்லை.

"எனினும், பிரபாகரனின் 12 வயது மகன், அரச இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு, பின்னர் அவர்களால் படுகொலை செய்யப்பட்டார் என்றே நாங்கள் மிக மிக வலுவாக சந்தேகிக்கிறோம்.

"இது முற்றிலும், மிக மோசமான பொறுப்பற்ற, தீய செயல். இந்தவிடயத்தில் அரச படையினர் நேர்மையாகச் செயற்படாதமை துரதிஷ்டம்." – என்றும் அவர் கூறியுள்ளார்.

# 500 கோடி ரூபா சொத்து அரசுடைமையானது: இல்லை என மறுக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ!



கொழும்பு, ஓக. 19

எனது குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் அரசுடைமை யாக்கப்பட்டுள்ளன என அரச தரப்பு வெளியிடும் செய்தியில் எவ்வித உண்மையும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசில் உள்ளவர்களின் ஊழல், மோசடிகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ராஜபக்ஷ குடும்பத்தினருடன் தொடர்புடைய வழக்குகளை விசாரிப்பதற்கு விசேட நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த யோசனை நாட்டின் அரசமைப்புக்கும், சட்டத்தின் முன் யாவரும் சமன் என்ற தார்மீகத்துக்கும் முரணானதாக இருக்கின்றது.

அரசில் உள்ளவர்களின் ஊழல், மோசடிகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிலையில், மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் நோக்கில் எனது குடும்ப உறுப்பினர்கள் விசாரணைகளுக்காக அழைக்கப்படுகின்றனர்.

எனது குடும்ப உறுப்பினர் களுக்கு சொந்தமான 500 கோடி ரூபாவிற்கும் அதிகமான சொத்துக்கள் அரசுடைமை யாக்கப்பட்டுள்ளன என்று அரச தரப்பு வெளியிடும் செய்தியில் எவ்வித உண்மையும் கிடையாது.

எனது குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான எந்த சொத்துகளும் அரசுடைமையாக்கப்படவில்லை.

எனினும், வேறு சிலருக்குச் சொந்தமான சொத்துகளை எனது குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமானவை எனக் காட்டுவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

நல்லாட்சி அரசு தவிர்ந்து வேறு எந்த அரசும் எதிர்த்தரப்பு அரசியல் வாதிகளுக்கோ அல்லது அவர்களின் குடும்பத்தினருக்கோ இவ்வாறு நெருக்குதல் செய்யவில்லை என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உறவினர்களிடம் இருந்து சட்டவிரோதமாக சம்பாதிக்கப்பட்ட 3 கோடி டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## சட்ட மா அதிபர் திணைக்கள செயற்றிறன் அதிகரிக்கப்படும்!

### நீதியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

சட்டமாஅதிபர்திணைக் களத்தின் செயற்றிறனை அதிகரிப் பதற்காக பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என நீதியமைச்சின் செயலாளர்பத்மசிறிஜயமான்ன தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தின் ஊழியர்களை அதிகரிப் பதற்காக புதிய ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கு பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின்அனுமதிக்காகக் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்-

கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பின்னர் அரச உயர் சட்டத்தரணிகள் 47 பேர் புதிதாக இணைத் துக் கொள்ளப்பட்டிருக் கின்றார்கள்.கடந்த ஓர் ஆண்டுக்குள் வழக்குத் தாக்கல் செய்தல், சட்ட மா அதிபரின் ஆலோசனை வழங்கல்போன்றவற்றை விரிவுபடுத்துவதற்காக சட்டமாஅதிபர்திணைக் களத்திடம் முறையான வேலைத்திட்டம் காணப் பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் வழக்குகளை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது திருப்தியடையும் விதத்தில் இருக்கின்றன, வருங்காலத்தில் ஊழியர்களை அதிகரித்துக் கொள்வதால் மிகவும் சிறந்த முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

## முகநூலில் பொய்யான பரப்புரை; பொலிஸார் இளைஞரிடம் விசாரணை!

கொழும்பு, ஓக. 19

வவுனியாவில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தொடர்பில் முகநூலில் அவதூறு பரப்பினார் என மேற்கொள்ளப்பட்ட முறைபாடு தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுள்ளன.

வவுனியா மாவட்ட பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தொடர்பாக வவுனியாவைச் சேர்ந்த இளைஞரொருவர் தனது பிரத்தியேக முகநூலில் அவதூறு பரப்பினார் என்றும் கட்சிக்கு இழுக்கை ஏற்படுத்தும்வகையிலானபொய்யான பரப்புரைகளை ஏற்படுத்தினார் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இது தொடர்பில் வவுனியா மாவட்ட இணைப்பாளர் ராஜன் மற்றும் கட்சியின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் குருஸ் மற்றும் வவுனியா மாவட்ட கட்சியின் முக்கியஸ்தர்களால் வவு னியா மாவட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டை யடுத்து விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் இந்த இளைஞனை நேற்று விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

விசாரணையின் முடிவில் குற்றம் நிரூபிக்கப்பட்டதை யடுத்து குற்றத்தை ஒப்புக் கொண்ட இந்த இளைஞன் தான் தவறுதலாக இதை மேற்கொண்டார் எனக் கூறி மன்னிப்புக் கோரியுள்ளார்.

இதனையடுத்து செல்வம் அடைக்கலநாதன் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டு செல்ல வேண்டாம் என்றும், தான் ஒரு மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அந்த இளைஞனின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு முறைப்பாட்டை மீளப்பெற்றுக் கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்தார் என கட்சியின் இணைப்பாளர் ராஜன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த இளைஞன் கடந்த 2015 ஆம் ஆண்டு குறிப்பிட்ட ஓர் கட்சியில் நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா தட்டான்குளம் கிராமத்துக்கு சுத்திகரித்த நீர் வழங்க நடவடிக்கை!





வவுனியா, ஓக.19

வவுனியா, செட்டிகுளம், தட்டான்குளம் கிராமத்துக்கு நோயற்ற சுகவாழ்வுத் திட்டத்தின் கீழ் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்துக்கான நிர்மாணப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் வவுனியா மாவட்ட நிலையப் பொறுப்பதிகாரி சி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் அதிகளவிலான சிறுநீரக நோயாளர்கள் இந்தப் பகுதிகளிலேயே காணப்படுகின்றனர்.

இந்த மக்கள் குடிதண்ணீர் தொடர்பாக நீண்டகாலமாக பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்த நிலையில் அந்த மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் முகமாக இந்தத்திட்டம்ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், காதர் மஸ்தான் மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் முகுந்தன், வவுனியா பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் பரமேஸ்வரன், கிராம மக்கள் பொது அமைப்புகள், பொலிஸார் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-100)

## ஆலய உற்சவங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.19

எழுவை தீவு முத்தன் காடு முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று சனிக்கிழமை தேர் வெள்ளோட்டமும் இரவு 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும்நாளை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இந்த நாள்களில் மாலை 4 மணிக்கு கலா பூஷணம் க.லோகேஸ்வரனின் பக்திரக கீதங்கள் பக்க வாத்திய சகிதம் இடம்பெறவுள்ளன. (இ)

★ ★ ★

கொக்குவில்,ஓக.19

கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகித்தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பரத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

# ஆள்காட்டிவெளி துயிலும் இல்லத்தை சீரமைக்க முயன்றபோது பதற்றம்





மன்னார், ஓக.19

மன்னாரில் மாவீரர் துயிலும் இல்லத்தைப் புனரமைக்க முற்பட்ட முன்னாள் போராளிகள், மாவீரர் களின் பெற்றோர் மற்றும் பொதுமக்களுடன் பொலிஸார் முறுகலில் ஈடுபட்டமையால் நேற்று அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

எனினும், அங்கு ஐந்து நிமிடம் மட்டும் அஞ்சலி செலுத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கியதை அடுத்து சுமுக நிலை ஏற்பட்டது.

தமிழீழ விடுதலைப் போரில் உயிரிழந்த மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்கள் அடம்பன் – ஆள்காட்டிவெளியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டனர். யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அந்த மாவீரர் துயிலும் இல்லத்தை படையினர் இடித்து அழித்துள்ளனர். அந்த இடம் தற்போது ப ற்றைக் காடாகக் காட்சியளிக்கின்றது.

இந்நிலையில், நேற்று மன்னாரில் உள்ள மாவீரர்களின் பெற்றோர் மற்றும் பொதுமக்களும் முன்னாள் போராளிகளும் இணைந்து அந்த மாவீரர் துயிலும் இல்லத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். அதன்போது, அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் அங்கு சென்று துயிலும் இல்லத்தின் சிரமதானப் பணியை நிறுத்த உத்தரவிட்டனர்.

ஆனால், முன்னாள் போராளிகளும் பொதுமக்களும் அதற்கு உடன்படவில்லை. அங்கு விதைக்கப்பட்டவர்கள் அனைவரும் தங்கள் சகோதரர்கள் எனவும் தமிழ் இனத்திற்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள் எனவும் எடுத்துக் கூறினர்.

அந்த மாவீரர்களை நினைவு கூருவது ஜனநாயக உரிமை எனத் தெரிவித்த அவர்கள், எந்தச் சந்தர்ப்பத்திலும் அந்த உரிமையைவிட்டுக்கொடுக்கப்போவதில்லை எனவும் அவர்கள் பொலிஸாருக்கு உறுதியாகத்தெரிவித்தனர்.

ஆனால், மாவீரர் துயிலும் இல்லத்தை சுத்தம் செய்வது தொடர்பாக எந்த அனுமதியும் பெறப்படவில்லை எனவும் பிராந்திய பொலிஸ் நிலையத்துக்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை எனவும் கூறிய பொலிஸார், அதனால், சிரமதானம் செய்வதை அனுமதிக்க முடியாது எனக் கூறினர்.

இதனால் இரு தரப்புக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கம் மூண்டது. அடுத்து என்ன கட்டம் என்பது தொடர்பாக தெரியாத நிலையில் அப்பகுதியில் பதற்றமான சூழல் காணப்பட்டது.

இதனிடையே, தாங்கள் அங்கு அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதி வழங்கவேண்டும்என முன்னாள் போராளிகளும் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோரும் பொலிஸாரிடம் கோரிக்கை முன்வைத்தனர். அதையடுத்து பொலிஸார் அவர்களுக்கு ஐந்து நிமிடங்கள் வழங்கினர். அந்த நேரத்தில் முன்னாள் போராளிகளும் பொதுமக்களும் துயிலும் இல்லத்தில் சுடர் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (ம– 112)

# காஞ்சி பஞ்சாங்க சதாஸ் நிகழ்வில் இலங்கைத் திருக்கணித ஜோதிடர்



பஞ்சாங்க சதாஸ் நிகழ்வில் பங்கு பற்றிய வேத சாஸ்திர விற்பன்னர்களைப் படத்தில் காணலாம்.

வருடந்தோறும் காஞ்சிபுரம் சங்கராச்சார்ய மடத்தில் இடம்பெற்றுவரும் ‘பஞ்சாங்கசதஸ்’ கடந்த ஜூலை 20, 21, 22 ஆம் திகதிகளில் நடைபெற்றது. காஞ் சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திரசரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் விளம்பி வருடத்திற்கான (2018-19) விரத நாள்களைச் சரிபார்க்கும் நிகழ்வு கடந்த 20.07.2017 அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து தொடர்ந்து மூன்று நாள்கள் இடம் பெற்றன.

இதில் மூத்த வேத தர்ம சாஸ்திரவிற்பன்னர்களும், இந்தியா விலிருந்து வெளிவரும் பல வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கக் கணிதர்களும், பஞ்சாங்க வெளியீட்டாளர்களும் கலந்து கொண்டனர். தர்மசாஸ்திர விற் பன்னர்கள், பஞ்சாங்கங்களில் சிரார்த்த திதி, விரதாதிகள், பண்டிகை நிர்ணயம் தொடர்பாக சாஸ்திர ரீதியிலான விளக்கங்களைக் கூறி தெளிவு படுத்தினர். இறுதியில் தர்ம சாஸ்திர விற்பன்னர்களின் ஆலோசனையில் விளம்பி வருட (2018-19) பஞ்சாங்க கணிப்பு களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. தவறான கணிப்பை மேற்கொண்டவர்களை திருத்துமாறும் கூறப்பட்டது. முக்கிய விசேடங்கள் யாவற்றையும் பஞ்சாங்க மாறு பாட்டால் பேதமில்லாது ஒரே நாளில் நிர்ணயம் செய்யுமாறு பஞ்சாங்க கணிதர்களுக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது.

இந்த வருடமும் இலங்கை யாழ்ப்பாணம் மட்டுவிலில் இருந்து வெளிவரும் திருக்கணித பஞ்சாங்கத்தின் கணிதர் ஜோதிட மணி பிரம்மஸ்ரீ. சி. ஜெகதீஸ்வர சர்மா பஞ்சாங்க சதஸில் கலந்து சிறப்பித்தார். இலங் கையிலிருந்து ஏக பிரதிநிதியாக இவர் மட்டுமே சென்றிருந்தார். இது இலங்கை மக்களுக்கு பெருமை தரக்கூடிய நிகழ்வாகும்.

சதஸின் இறுதிநாளன்று தர்ம சாஸ்திர விற்பன்னர்கள், பஞ்சாங்க கணிதர்கள் ஆகியோரை ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளாசிவழங்கிக் கௌரவித்தார்.

# இலங்கை மக்களின் நன்மைக்காக மட்டக்களப்பில் மாபெரும் யாகம்

## இரு தினங்கள் நடைபெற்றது





மட்டக்களப்பு, ஓக.19

உலக நன்மைக்காகவும் இலங்கை மக்களுக்கு நல்லாசி வேண்டியும் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் மகா யாகம் ஒன்று இடம்பெற்றது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமான இந்த யாகம் நேற்றும் இடம்பெற்று முடிவடைந்தது.

நாட்டில் ஏற்பட்ட அகால மரணங்களால் உயிர் நீத்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், அவற்றால் நாட்டுக்கு ஏற்பட்ட தோஷ நிவர்த்திக்காகவும், இலங்கையில் மிகப் பெரிய தெய்வீக அருளாட்சி மலர்ந்து அனைவரும் சுபீட்சம் பெறும் நோக்கத்துடன் இந்த யாகம் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டதாக அதன் ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

தென்னிந்தியாவின் கொல்லிமலையெனும் சித்தர்கள் வாழும் பூமியில் சித்தர் மஹா பைரவ உபாசகர் காகபுசுண்டர் தருமலிங்க சுவாமிகள் தலைமையில் இந்த யாகம் இடம்பெற்றது. இதில், சிவாச்சாரியர் விஸ்வப் பிரம்மரிசி நாராயணக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர்களும், மஹா அஸ்டபைரவ உபாசகர்கள், யோகிகள், கேரள சாஸ்திர வேத விற்பன்னர்களான நம்பூதிரிகள் இணைந்து சித்தர் முறைப்படி இந்த வேள்வியை நடத்தி முடித்தனர்.

10,008 அபூர்வ காய கல்லு மூலிகைகளைக் கொண்டு நடத்தப்பட்ட இந்த யாகத்தின்போது குதிரைகள், யானைகள் என்பனவும் அங்கு பிரசன்னமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேள்வியில் கலந்துகொள்வதன் மூலம் ஒருவரைப்பீடித்துள்ள துன்ப, துயரங்கள், நோய்கள், கர்மவினைகள் நீங்கி சந்தோசமான வாழ்வினை எட்ட முடியும் என்பதுடன் பிதிர்களின் ஆத்மசாந்தியையும் மேற்கொள்ளலாம் என இங்கு தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக இவ்வாறான யாகம் ஒன்று தற்போதுதான் நடத்தப்பட்டது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த யாகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (ம)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.